

# ரமணோதயம்

அக்டோபர் 2013
காலாண்டு

அண்ணாமலை தீப இதழ்
விலை ₹ 20



ஸ்ரீமாத்ருபூதேச்வர-ரமணேச்வர
மஹாலிங்க கும்பாபிஷேகம்
25-8-2013



உதயம் 13 ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய மலர் 1

# ரமணோதயம்

நானுதியாதுள்ள நிலை நாமதுவாய் உள்ள நிலை

அண்ணாமலை தீப இதழ்

அக்டோபர் 2013

ஆசிரியர்: Dr. S. ராம் மோஹன்

இணை ஆசிரியர்: தியாகராஜன்

ஆலோசகர்கள்:

ஏ.வி. சுப்ரமணியன், ஜா. ஜயராமன், சந்திரமௌலி

- கட்டுரைகள், ஆண்டு சந்தா, விளம்பரங்கள் குறித்த அனைத்து கடிதத் தொடர்புகளுக்கும் ஸ்ரீ ரமண கேந்திர அலுவலக முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.
- கட்டுரைகளுக்கு சன்மானம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது. பிரசுரமாகாத கட்டுரைகள் வேண்டுகோளின்பேரில் திருப்பி அனுப்பப்படும்.
- மற்றைய எழுத்தாளர்களின் கட்டுரைகளில் வெளிவரும் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல.

## சந்தா விவரங்கள்

ஆண்டு சந்தா: ₹ 75 தனி பிரதி: ₹ 20
ஆயுள் சந்தா: ₹ 1500

காசோலை/மணியார்டர் 'ரமணோதயம்' என்ற பெயரில் எடுத்து ரமண கேந்திரா டிரஸ்ட், 41, அலமேலுமங்காபுரம், மைலாப்பூர், சென்னை 600 004 என்ற முகவரிக்கு அனுப்பவும்

ரமணோதயம் தகவல் மற்றும் தொடர்புக்கு அணுகவும்:
குமார் ராஜா: 9444261296
மின்னஞ்சல்: arunamramanam@gmail.com
மேலாளர் கண்ணன்: 9940418375

வடிவமைப்பு: ஸ்ரீ ரமணாச்ரமம்

பதிப்பாளர் & அச்சிடுபவர்:
குமார் ராஜா, ரமண கேந்திரா டிரஸ்ட்
41, அலமேலுமங்காபுரம், சென்னை 600 004

உரிமை: ரமண கேந்திரா டிரஸ்ட், சென்னை 4
தொலைபேசி: 24611397

# பொருளடக்கம்

அண்ணாமலை தீப இதழ், அக்டோபர் 2013


| வ.எண் | பொருள் | ப.எண் |
|---|---|---|
| 1 | ஆசிரியர் உரை | 3 |
| 2 | ரமணோதயம் காப்புநிதி<br>தொடரும் நன்கொடையாளர்கள் | 16 |
| 3 | பஜ கோவிந்தம்<br>டாக்டர் சுதா சேஷய்யன், ஜி. ஸ்ரீகாந்த் | 17 |
| 4 | இனிவரும் திருநாட்கள் | 20 |
| 5 | மனதைத் தாலாட்டும் ரமண உணர்வலைகள்!<br>பிர. கிரிதர ஜெகதீஷ் | 21 |
| 6 | நான் யார் தெரியுமாவிலிருந்து நான் யார் வரை<br>Dr.ஏ.வி.ராஜகோபாலன் | 31 |
| 7 | திருரமணக் குறள் தாயுமானவன் | 39 |
| 8 | அருளின் ஆட்சி நொச்சூர் வேங்கடராமன் | 41 |
| 9 | ஞான விளக்கம் வி. நிரஞ்சன் | 46 |
| 10 | கிரிவலம் - ஒரு புதிர் | 52 |
| 11 | காலம் கடந்த காட்சி (ஒரு கற்பனை)<br>சு. பரமேஸ்வரன் | 53 |
| 12 | கடவுளின் சர்வ வல்லமையைச் சந்தேகிக்காதீர்கள்<br>(ஸ்வாமி சிவானந்தரின் உபதேசக் கதையிலிருந்து) | 60 |
| 13 | ஸ்ரீ மாத்ருபூதேச்வர-ரமணேச்வர மஹாலிங்க<br>கும்பாபிஷேகம் | 63 |
| 14 | திருச்சுழி பூமிநாதேஸ்வரர் ஆலய கும்பாபிஷேகம் | 68 |
| 15 | செய்திகள் | 70 |

# ஆசிரியர் உரை

## அளிவளர் உள்ளத்து ஆனந்தத் தேன்

அருணாசலம் இறைவன் எல்லார் உள்ளத்திலும் அந்தர்யாமியாய் உள்ளான். உள்ளம் என்னும் பெருங்கோயிலில் அவன் அமர்ந்திருக்கிறான். அவன் ஒளி உருவாய் உள்ளே உள்ளான். ஆயினும் வல்லோர் கண்ணுக்கு அவன் புலப்படுவதில்லை. வீடு முழுக்க சக்தி வாய்ந்த மின் விளக்கைப் போட்டிருந்தாலும், மின்சார சக்தி இணைக்கப்படாவிட்டால் விளக்கு எரியாது. ஒளி தோன்றாது. எனவே உள்ளத்தில் வீற்றிருக்கும் இறையுணர்வு என்னும் விளக்கு ஒளிதர, அவன்மீது கொள்ளும் பேரன்பு என்னும் மின் இணைப்பைத் தர வேண்டும். அப்போது அந்த இறை ஒளி தோன்றுகிறது. உள்ளத்தில் அவன்மீது அன்பு பெருக்கெடுக்கும்போது அவனது அருளும் சுரந்து வருகிறது.

தமிழில் ‘அளி’ என்னும் சொல்லுக்கு அன்பு, அருள் என்னும் இரு பொருளுமே வருகின்றன. ‘அருள் என்னும் அன்பின் குழவி’ என்று வள்ளுவர் கூறுகிறார். அருளுக்கும் அன்புக்கும் இடையே உள்ள இந்த ஒற்றுமையை பகவான் அழகாகக் கூறுகிறார்.

*அண்ணாமலை உனை எண்ணான் எனஎனை*
*அண்ணாந் தேங்கிட எண்ணாதே*
*மண்ணாம் மலஉடல் எண்ணா அகமென*
*மண்ணா மாய்ந்திட வொண்ணாதே*

*தண்ணார் அளிசெறி கண்ணா டொருகிரி*
*பண்ணாது என்னிரு கண்ணாளா*
*பெண்ஆண் அலிஉரு நண்ணா ஒளிஉரு*
*அண்ணா லென்னக நண்ணாயே!*

*- அருணாசல நவமணிமாலை 4*

"தண்ணார் அளிசெறி கண்ணா!" என்று பகவான் அருணாசலனைஅழைக்கிறார். அன்பாகிய குளிர்மையால் பெருகும் அருள் சொரியும் கண்ணை உடையவனே! என்று விளித்து, "என் உள்ளத்தில் வந்து அமர்வாய்" என அழைக்கிறார். அங்ஙனம் அன்பு பெருகி நாம் அருணாசலனை அழைக்கும்போது, அவன் அருள் ஒளி பிரகாசிக்கிறது.

பகவான் கூறுகிறார்: "யாருமே உலகில் அஞ்ஞானிகள் அல்ல. எல்லோருமே ஞானிகள்தான். ஆனால் நாம் ஞானி என்பதை நாமே அறிந்து கொள்வதில்லை." மனிதனுக்கு புறக்கண்போல அகக் கண்ணும் உள்ளது. நமது புறக்கண் இருந்தாலும் இருளில் அது பயன்படுவதில்லை. அதற்கு ஒரு விளக்கு வேண்டும். புறக்கண்ணைப் பயன்படச் செய்ய விளக்கு தேவைப் படுவதுபோல, அகக்கண் பயன்படவும், ஓர் அக விளக்கு வேண்டும். அறியாமை இருளைப் போக்கி, அந்தமிலா ஞானக் கண்ணைப் பயன்படச் செய்ய இறைவனது அருள் விளக்கு வேண்டும். அவனே ஞானக் கண்ணைப் பயன்பட வைக்கும் ஒளி விளக்கு.

பகவானின் சரிதத்தில் சிறப்பிடம் பெற்ற திருக்கோயிலூரில் உள்ள பெருமாள் கோயிலில் பல நூற்றாண்டுகட்கு முன் நிகழ்ந்த ஒரு அருள் வரலாறு இதை விளக்குகிறது. ஓர் இருள் சூழ்ந்த இரவு. ஒன்றுமே கண்ணுக்குப் புலப்படாத காரிருள். அடைமழை பெய்து கொண்டு இருந்தது. அங்கே வந்த பொய்கை ஆழ்வார், அங்கே இறை சந்நிதானம் இருந்த ஒரு மிகச் சிறிய அறையில் வந்து மழைக்கு ஒதுங்கிப் படுத்தார். சிறிது

நேரத்தில் மழைக்கு ஒதுங்க இன்னொருவரும் வந்தார். அவர்தாம் பூதத்தாழ்வார். உள்ளே இருப்பது யார் என்று அறியாமல் "ஐயா! உள்ளே இடம் இருக்கிறதா? நான் வரலாமா?" என்று வினவினார். பொய்கை ஆழ்வாரும், "இங்கே ஒருவர் படுக்கலாம்! இருவர் அமரலாம்! வாருங்கள்" என அழைத்தார். மற்றவர் யார் என்றே அறியாத இருளில் பூதத்தாழ்வார் உள்ளே வந்து அமர்ந்தார். சிறிது நேரத்தில் மழைக்கு ஒதுங்க அந்தப் பேரிருள் அறைக்கு வெளியே பேயாழ்வார் வந்து "ஐயா! உள்ளே வரலாமா?" என்று கேட்டார். உள்ளே இருந்த இருவரும், "ஐயா! இருவர் அமரலாம், மூவர் நிற்கலாம். வாருங்கள்" என்று அழைத்தனர். பேயாழ்வாரும் உள்ளே புகுந்து, மூவரும் நெருக்கி அடித்து இருளில் நின்று கொண்டு இருந்தனர்.

தம்முடைய பேரன்புமிக்க அடியார் மூவர் இருக்கும்போது, பெருமாள் வேறு எங்கேயாகிலும் இருப்பானா என்ன? அவனும் அந்த மூவருடன் நான்காவது ஆளாக நெருக்கி அடித்து வந்து நின்று விட்டான்!

"நம்மைக் கேட்காமலேயே நான்காவதாக ஒருவன் வந்து நிற்கிறானே! யாரிவன்? இந்தப் பேரிருளில் ஒன்றுமே தெரியவில்லையே" என்று ஆழ்வார்கள் சிந்தித்தனர். பொய்கை ஆழ்வார், "இங்கே வெளிச்சம் வந்தால் தெரிந்துவிடும். வெளிச்சத்தை வர வழைப்போம்" என்று வெண்பா ஒன்றைப் பாடினார்.

வையம் தகளியாய் வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காக - செய்ய
சுடர்ஆழியோன் அடிக்கே சூட்டினேன் சொல்மாலை
இடர்ஆழி நீங்குகவே இன்று.

- முதல் திருவந்தாதி, 1

"பூமியே அகலாகவும், பெரிய சமுத்திரமே நெய்யாகவும், வெப்பமான கிரணங்களை உடைய

*சூரியனே தீபமாகவும், கொண்ட சுடர்கின்ற சக்ராயுதத்தைக் கொண்டுள்ள இறைவன் திருவடிகளில், இடர் மிகுந்த இருளாகிய துன்பக்கடல் நீங்க வேண்டும் என்று இந்த சொல்மாலையைச் சூட்டுகிறேன்" என்று பாடினார். அப்போது உடனே வெளிச்சம் வந்து இருள் விலகியது. ஆயினும் அந்த நாலாவது ஆள் எவன் என்று தெரியவில்லை. இறைவனைக் காண வெளிஇருள் விலகினால் மட்டும் போதுமா? அக இருளும் விலக வேண்டாமா? எனவே பூதத்தாழ்வார் பாடினார்:*

> ***அன்பே தகளியாய் ஆர்வமே நெய்யாக***
> ***இன்பு உருகு சிந்தை இடுதிரியா - நன்புஉருகி***
> ***ஞானச்சுடர் விளக்கு ஏற்றினேன் நாரணற்கு***
> ***ஞானத் தமிழ் புரிந்த நான்.***

*- இரண்டாம் திருவந்தாதி, 1*

*"இறைவன் மீது கொண்ட பேரன்பே அகலாகவும், அவனை அடைய வேண்டும் என்ற பேரார்வமே நெய்யாகவும், அவனது நாமத்தை எண்ணியவுடன் கரைகின்ற மனமே திரியாகவும் ஆகி, ஞானத்தைத் தருகின்ற பிரபந்த ஆசிரியனாக, நான் ஞான ஒளிவிளக்கை ஏற்றுகின்றேன்" என்று தனது அகத்தே அன்பு விளக்கை ஏற்றிப் பாடினார்.*

*உடனே அருள் சுடர் எழுந்தது. நான்காவது ஆளாகிய பெருமாளே உடனே தெரிந்தான். அந்தத் திருமேனி கண்டவுடன் பேயாழ்வார் பாடினார்:*

> ***திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்***
> ***அருக்கன் அணிநிறமும் கண்டேன் - செருக்கிளரும்***
> ***பொன்ஆழி கண்டேன் புரிசங்கும் கைகண்டேன்***
> ***என்ஆழி வண்ணன்பால் இன்று.***

*- மூன்றாம் திருவந்தாதி, 1*

*"இறைவனது அருள்பெற்று இன்று பெருமாளாகிய பெருஞ்செல்வத்தைத் திருமகளுடன் கண்டேன். அவனது திருமேனியைக் கண்டேன். விளங்குகிற சூரியன்போல்*

*பிரகாசமான ஒளி உருவைக் கண்டேன். யாவரையும் வெல்லும் பொன் சக்கரத்தையும், சிறந்த பாஞ்சஜன்யம் என்னும் கங்கையும் ஏந்திய பெருமாளைக் கண்டேன்" என்று பாடினார். இறைவன்மீது கொண்டுள்ள அன்பு நம் இதயத்தை அடைந்தவுடன் அங்கே மறைபொருளாய் இதுகாறும் இருந்த இறைவன் ஆன்ம தீபமாய் பிரகாசிக்கின்றான்.*

*நாம் தீபாவளி சமயத்தில் 'ராக்கெட்' என்னும் வாணத்தை விடுகிறோம். முதலில் மேலேயுள்ள திரியில் நெருப்பை வைக்கிறோம். அந்த நெருப்புப் பொறி முதலில் உள்நோக்கிச் செல்கிறது. நம் கண்ணுக்குத் தெரியாமல் உள்ளே செல்கிறது. பிறகு உள்ளே உள்ள வெடிமருந்து பற்றிக்கொண்டு அழகிய வர்ண ஜாலத்துடன் ஏராளமான தீக்கங்குகளை வெளியே பரப்புகிறது. ஒரு மிகச் சிறிய நிறமற்ற நெருப்புப்பொறி உள்முகமாய்ச் செலுத்தப்பட்டவுடன் மிகப் பிரகாசமான வர்ணப் பொறிகள் வெளியே வந்து ஒளிர்கின்றன.*

*அதேபோல் மனமாகிய சிறிய தீப்பொறி வெளியே நோக்கிக் கிடந்தால் சில நேரத்தில் பயனற்று அணைந்து விடும். அதை உள்நோக்கித் திருப்பினால் அங்கே உள்ள அற்புதமான ஞானக் கிடங்கில் பற்றி, ஆத்ம ஞானமாம் பேரறிவைப் பெற்று உலகம் முழுதும் ஒளியுடன் பரப்பும். அங்ஙனமே, நூற்றைம்பது ஆண்டுகட்கு முன்தோன்றி ஸ்ரீஇராமகிருஷ்ணரால் பற்றவைக்கப்பட்ட விவேகானந்தர் என்னும் ஒளிவிளக்கு உலகம் முழுதும் ஞானப் பொறிகளை வாரியிறைத்தது. எனவே "வெளியே திரியும் மனதை உள்நோக்கித் திருப்புக. அப்போது 'நான் யார்' என்ற பேருண்மை வெளிப்படும்" என்கிறார் பகவான்.*

*"வெளிவிடயங்களை விட்டு மனம்தன்*
*ஒளிஉரு ஓர்தலே உந்தீபற*
*உண்மை உணர்ச்சியாம் உந்தீபற*
*- உபதேச உந்தியார், 16*

*புற இருளைப் போக்கும் விளக்கு எண்ணெய்-திரி தீர்ந்து போனால் மங்கி மறையும். நமக்கு இப்போது பழக்கப்பட்டு விட்டதுபோல், மின்சார விளக்கும், மின்சக்தி இல்லையெனில் எரியாது. எந்தவித விளக்கானாலும் எரிய எரிய அதன் ஒளிதரும் சக்தி குறைந்து கொண்டே வரும். ஆனால் அகத்து இருளைப் போக்கி, ஞானக் கண்ணால் காண வைக்கும் இறை அருளாகிய விளக்கின் ஒளி, நாம் சாதனை செய்யச் செய்ய வளர்ந்து கொண்டே வரும். அது அழியாமல் என்றும் உள்ள ஞான தீபம். திருமாளிகைத் தேவர் தேவாரத்தில் அழகுறப் பாடுகிறார்.*

*ஒளிவளர் விளக்கே உவப்பிலா ஒன்றே !*
*உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே !*
*தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே !*
*சித்தத்துள் தித்திக்கும் தேனே !*
*அளிவளர் உள்ளத்(து) ஆனந்தக் கனியே !*
*அம்பலம் ஆடரங் காக*
*வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்*
*தொண்டனேன் விளம்புமா விளம்பே.*

*- திருவிசைப்பா, 1*

*பொருள்: "அன்பினால் உனைத் தொழும்போது, ஞானமாகிய பிரகாசம் மேன்மேலும் வளர்கின்ற ஞானதீபமே! அழிவில்லாத ஒப்பற்ற அத்வைதமான பரம்பொருளே உணர்ச்சி நிலைகளை எல்லாம் கடந்த ஞானாநுபவமே! தெளிவு நிறைந்த பளிங்கு போன்ற மனதில் தோன்றுகிற திரண்ட ஞானச் சிகரமே! சித்தத்தில் தித்திக்கின்ற தேனே! அன்பு வளர்கின்ற அடியவர் உள்ளத்தில் பழுத்த ஆனந்தக் கனியே! எனது இதயமாகிய சிதாகாசத்தில் நடன அரங்காகக் கொண்டு நீ ஆடும் ஆனந்த நடனத்தை விரும்பி ஆடுகின்ற உன்னை யான் பணியும் முறையை தொண்டனாகிய எனக்குப் போதித்து அருள்வாய்!"*

“உணர்வு சூழ் கிடந்ததோர் உணர்வே” என்ற பிரயோகம் மிக அழகியது. இறைவன் ஓர் உணரப்படும் பொருளா? அப்படியானால் அவனை நாம் எங்ஙனம் உணர்கிறோம்? நாம் உலகில் அறியும் உணர்வுகள் இந்திரியங்களால் பெறப்படுபவை. இன்பம், துன்பம், என்னும் இருவகை நுகர்ச்சிகளைத் தருபவை. அவையும் நிலையின்றி அழிபவை. இறைஉணர்வு அப்படி இந்திரிய உணர்ச்சியால் பெறப்படுவது அன்று. அவன் சுகதுக்கங்களைக் கடந்த சச்சிதானந்தப் பொருள். அவனை நாம் மாசு நீங்கிய சுத்தப் பிரக்ஞை உணர்வாலேயே உணர்கிறோம். பளிங்கு போன்ற தூய்மையான உள்ளத்தில் சுத்த மனஸ் என்று குறிப்பிடப்படும் இந்தப் பளிங்கு போன்ற உள்ளத்தில் அவன் தோன்றுகிறான்.

உலக உணர்வு எப்படி வருகிறது? “உலகு ஐம்புலன்களின் உரு! வேறன்று” என்று கூறுகிறார் பகவான் (உள்ளது நாற்பது 6). உணரப்படும் ஐந்து விஷய உணர்ச்சிகளையும் (சுவை, ஒளி, தொடு உணர்ச்சி, ஓசை, மணம்) அறிவது மனம் ஒன்றே. மனம் ஐந்து பொறிகளின் வழியே செயல்படும்போது மட்டுமே மனதால் உலகம் உணரப்படுகிறது. மனம் இந்திரியங்களின் வழியாக செயல்படாத ஆழ்ந்து தூக்க வேளையில் உலகமும் இல்லாது போகிறது. பகவான் இதற்கு ஒரு புது விளக்கம் தருகிறார். உலகம் உண்மையில் மனத்தினால் உருவாக்கப்படுவதே அன்றி, அது வெளியில் இருப்பது இல்லை. கனவில் தோன்றும் உலகமும், அதனுள் காண்பான் உட்பட பல பொருட்களும் மனதிலேயே தோன்றி, கனவு முடிவில் அங்கேயே மறைகின்றன. அதே போன்றே நனவு உலகத்திலும், உலகம் மனத்தால் உருவாக்கப்படுவதே; மனமும் ஜீவனும் ஒன்றே. உலகம் என்பது மனத்தில் இருப்பதே. மனதால் உருவாக்கப் படுவதே. இதை அறியாமல் மனம் உலகம் வெளியில்

இருப்பதாகக் கருதி, அதை அனுபவிப்பதாக எண்ணிக் கொண்டு மயங்குகிறது. மனிதன் தன்னை இவ்வுடல் அளவாகக் குறுக்கிக் கொண்டு ஓர் எல்லைக்கு உட்படுத்திக் கொள்வதால் உள்-வெளி என்று மயங்குகிறோம். 'உடல், நான்' என்ற புத்தியே உலகத்தை உருவாக்குகிறது.

*தன்னைக் குறுக்கித் தனுவாக்கி*
*தனுவின் உணர்வை ஜகமாக்கி*
*தன்னைக் கண்டே தான் மயங்கும்*
*தடுமாற்றம்தான் ஜகமாயை*
*உலகாய் உடலாய் உணராமல்*
*ஒன்றாய் நீயாய் உரமாக*
*இலகும் நிலையே இறைபதம்; உன்*
*இஷ்டம் எதுவோ அது முடியும்!*

*- சாதனை சாரம், 44-5*

தன்னை உடலாகவும், உலகமாகவும் தவறாக எண்ணிக் கொள்ளாமல், தன்னை ஆத்மா ஆகவே, ஒன்றான பரம்பொருளாய் உள்நோக்கி உணர சாதனை செய்யும்போது, இறை அருள் வந்து விகசிக்கிறது. அப்போது உள்நோக்கிப் பயணித்த "நான்" எனும் உணர்வில் கவிந்து தானாகவே அங்கு வந்து இறைவன் ஆட்கொள்கிறான். அதுவே அவனது அருள். அதுவே அவனது எளிமை.

*பன்னெடுங்காலம் பணிசெய்து பழையோர்*
*தாம் பலர் ஏம்பலித்து இருக்க*
*என் நெடுங்கோயில் நெஞ்சுவீற்றிருந்த*
*எளிமையை என்றும் நான் மறக்கேன்.*

*- இராசராசேச்சுரப் பதிகம், 8ஆவது பாடல்*

சத்குருவின் சந்நிதியில் நாம் நமது எளிமையையும் அவனது பெருமையையும் உணர வேண்டும். குருவாசகக் கோவையில் பகவான் இதை ஓர் அழகான உவமையால் உணர்த்துகிறார்.

*வீரமிலாத் துரும்பு மேன்மிதப்ப ஆழிவாய்ப்*
*பார தரளம் கீழ்ப் படிதலால் - பார்அகத்து*
*மேலிருந்து மேலல்லார் மேலல்லர்; கீழிருந்தும்*
*கீழல்லால் கீழல்லவர்."*

- குருவாசகக் கோவை, *499*

*நம்மில் பலரும் ஒரு பொது இடத்துக்கோ, ஏன், ஒரு ஆசிரமத்துக்குப் போகும்போது கூட தானே முன்னால் இருக்கவேண்டும். தனக்குத் தனிச் சிறப்பு வேண்டும். தனது உயர்வைப் பிறர் அறிய வேண்டும் என்ற தன் முனைப்புடன் செயல்படுகிறோம். பகவான் இதனை உவமை மூலம் விளக்குகிறார். பொருண்மையே இல்லாத சிறு துரும்பு மேலே தலைநீட்டி மிதந்து வருகிறது. மதிப்பு மிக்க நல்முத்தோ கடலில் அடிவாரத்தில் படிந்து கிடக்கிறது. எனவே மேலே தலைதூக்கி ஆணவத்துடன் திரிபவர் மேன்மையல்லவர் என்றும், ஆணவம் முற்றிலும் அழிந்து, கீழ்ப்படிந்து இருப்பவர்கள் கீழானவர் அல்லர். அவரே உயர்ந்தவர் என்கிறார் பகவான்.*

*பகவான் வாழ்விலும் இந்த எளிமை உணர்வு பலவிதத்திலும் வெளிப்படுத்தப் பட்டது. ஒரு சமயம், ஆச்ரமத்துக்கு சில முக்யஸ்தர்கள் வருகை தர இருந்தனர். ஆசிரம போஜனசாலையில் நெருக்கடி குறைப்பதற்காக, ஆசிரம நிர்வாகிகள், போஜன சாலையில் முக்யத்துவம் வாய்ந்தவர்கள் மட்டுமே சாப்பிடலாம், மற்றபடி சாமான்யர்கள் வெளியே வரிசையில் நின்று உணவைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவித்தனர்.*

*நண்பகல் உணவு வேளை நெருங்கியது. முக்யஸ்தர்கள் போஜன சாலைக்குள் வந்து, பகவான் வருவதற்காகக் காத்திருந்தனர். பகவானை எங்குமே காணோம். உணவு வேளை கடக்கும் நிலை வந்ததால், ஆச்ரம நிர்வாகிகள் பகவானைத் தேடி வெளியே வந்தனர். பார்த்தால் பகவானோ 'க்யூ' வரிசையில் எல்லோருடன்*

*காத்துக்கொண்டு நின்றிருந்தார். பெரும் அதிர்ச்சி அடைந்த நிர்வாகிகள் 'பகவானே! நீங்களா வந்து இங்கே இவர்களுடன் உணவுக்காகக் காத்திருப்பது. அங்கே போஜன சாலையில் அனைவருமே உங்கட்காகக் காத்திருக்கிறார்களே!' என்றனர். பகவானோ புன்னகையுடன் "நீங்கள்தானே அறிவித்தீர்கள், போஜனசாலையில் இன்று முக்யஸ்தர்கட்கு மட்டுமே அனுமதி. சாமானியர்கள் வெளியே வரிசையில் நின்றுதான் உணவு பெறவேண்டும் என்று கூறினீர்கள்! நானும் ஒரு சாமான்யன்தான். எனவே இங்கேயே வரிசையில் நின்று உணவு பெற்றுக் கொள்கிறேன்" என்றார். தலைகுனிந்த நிர்வாகிகள் தமது உத்தரவை வாபஸ் வாங்கினர். அப்பாலுக்கு அப்பாலாய் உயர்ந்த பகவான், தன்னை இப்படி அணுவுக்கு அணுவாய் காட்டிக் கொண்டது மற்றையோருக்கு அனுபவ உபதேசம் அளிக்கவே.*

*மற்றோர் சமயம், ஆஸ்ரமத்தில் தங்கியிருந்த ஒருவர், தன்னை மற்றையோரிலும் உயர்வாக எண்ணிக் கொண்டார். ஆச்ரம வழக்கப்படி எல்லோரும் (பகவான் அதை விரும்பாவிடினும்) பகவானுக்குச் சற்று தாழ்வான இடத்திலேயே அமர்வது சம்பிரதாயம். இவர் மட்டும் எப்பொழுது வந்தாலும் பகவான் உட்காரும் இடத்திற்குச் சமமான உயரத்திலேயே அமர்வார். ஒருசமயம் மலையடிவாரத்தில் பகவான் ஒரு சிறிய கல்லின்மீது அமர்ந்திருந்தார். சற்று நேரத்தில் அந்தச் சாது அங்கு வருவார் என்று அறிந்த அடியார்கள் அங்கு வேறு ஒரு கல்லும் இல்லாதிருந்ததைக் கண்டு, 'இப்போது பகவானுக்குச் சமமான உயரமுடைய கல் ஏதும் இங்கு இல்லையே! இவர் எங்கு உட்காருவார்!' என்று சந்தோஷப்பட்டனர்.*

*அங்கு வந்த அந்தச் சாது, அங்குமிங்கும் பார்த்தார். பகவான் அமர்ந்திருந்த கல்லுக்குச் சமமான உயரமுடைய*

எந்தக் கல்லுமே இல்லாததைக் கண்டு வேறுவேலை இருப்பதுபோல் காட்டி அங்கிருந்து அவசரமாகச் சென்று விட்டார்.

'ஆஹா, நமது குறிக்கோள் வெற்றிபெற்றது' என்று அடியார் மனதில் மகிழ்ந்தனர். உடனே பகவான், "அவரை அனுப்பி விட்டீர்கள். உங்கள் ஸ்வாமிதான் உயர்ந்தவர் என்று ஸ்தாபித்து விட்டீர்கள். எனவே மேலே அவர் இருக்கக்கூடாது என்று எண்ணுகிறீர்கள். சரி, இவரை என்ன செய்வீர்கள்?" என்றுகூறித் தலைக்கு மேலே விரலைக் காட்டினார். எல்லோரும் மேலே பார்த்தனர். சரியாக பகவானது தலைக்குமேல் உள்ள மரக்கிளையில் கால்மேல் கால் போட்டு உட்கார்ந்து, வாலை நீட்டிக்கொண்டு ஒரு குரங்கு உட்கார்ந்து இருந்தது. உங்கள் ஸ்வாமியைவிட இவர் உயர்ந்த ஸ்தானத்தில் உள்ளாரே! என்று நகைத்தார் பகவான். யாருக்கும் யாரும் உயர்ந்தவர் அல்ல. அனைவரும் ஆத்மாவின் கூறே' என்று பகவான் எடுத்துக்காட்டாக விளக்கிய சம்பவம் இது.

இங்ஙனம் இறையருள் இதயத்தில் பதியும்போது சாதகனது தன் முனைப்பு முற்றிலும் அழிக்கப்படுகிறது. அக்ஷரமணமாலையில் பகவான் அருணாசலனிடம் கோபிப்பதுபோல் கூறுகிறார். "அருணாசலா! நீ எப்படிப்பட்ட கொடிய கொலைகாரன் தெரியுமா? உன்னை நேசிப்பவர்களை வலிந்து இழுத்து கொடியினால் கட்டித் தனிமையில் செல்பவன் அல்லவா நீ? இப்படிப்பட்ட உன்னைக் காதலித்துக் கட்டிக் கொண்ட நான் மட்டும் எப்படி உயிரோடு வாழ முடியும்? என்று பாடுகிறார்.

அன்பே மயமான அருணாசலனை நோக்கி, "அடியவரைக் கொல்பவன் நீ என்று கூறுவதா என்று அன்பர் வியக்கலாம். ஆம்! உண்மைதான். ஆனால் அவன் அழிப்பது தேர்ந்து எடுக்கப்பட்ட சிலரையே!

இறையனுபவம் பெற உண்மையிலேயே விரும்பும் முமுட்சுக்களை அவன் குறிவைத்து அவர்களைக் கயிற்றால் இறுகக்கட்டி தன் பிடியில் இருந்து தப்பி ஓடிவிடாமல் செய்கிறான். தன்னிடமிருந்தே எழுந்து பெருகி, உருகக் கரையும் உயர் பக்தியில் இருந்து எக்காலத்திலும் எக்காரணத்தாலும் நழுவி, உலக விஷயங்களில் சென்றுவிடாதபடி அந்தச் சாதகனின் மனதைத் தன் அருட்கொடியால் கட்டி தன்னிடம் இருத்திக் கொள்கிறான். பின்னர் கொல்கிறான். எப்படி? அந்த உயிர் தன்னை தனிப்பட்ட ஜீவனாகக் கருதி அவ்வப்போது தோன்றும் உடல்-மனத்தையே 'தான்' எனக்கருதி, அவனைப் பேதப்படுத்திய 'நான்' என்னும் அகந்தையை ஒழிக்கிறார். அத்துடன் 'நான்' கொல்லப்பட்டு, இறைவனுடன் ஜீவன் ஒன்றாகிறது. இந்த அகந்தை அழிவே கொல்லுதல் எனும் செயல்.

ஆரம்பத்தில் 'அளி' என்ற சொல்லை 'அருள்' என்னும் பொருளில் பகவான் பயன்படுத்தி இருப்பதைப் பார்த்தோம். அதே 'அளி' என்னும் சொல்லின் மற்றொரு பொருளான 'வண்டு' என்ற அர்த்தத்திலும் பகவான் பிரயோகித்து உள்ளார். அருணாசல பதிகம் ஆறாவது பாடலில்,

> தற்பர நாளும் தாளினில் தங்கி
> தண்டலர் மண்டுகம் ஆனேன்
> சித்பத நல்தேன் உண்மலர் அளியாச்
> செய்திடில் உய்திஉண்டு....

என்று கூறுகிறார். "இறைவனே! தாமரை மலரின் தண்டிலே பலநாள் தங்கியிருந்தும் உள்ளம் விகசிக்காத தவளைபோல் இருக்கின்றேன்! உன்னுடைய சித்பதமாகிய தேனை உண்டு ஆத்மாநுபவத்தேன் உண்டு பரமானந்தம் அடையும் தேன்வண்டு போன்று நீ உன் அருளினால் பரிணமிக்கச் செய்தால் மட்டுமே எனக்கு உய்வு உண்டு" என்று பகவான் பாடுகிறார். ஆத்மிகச்

*சிகரத்தில் வீற்றிருக்கும் பகவான் இங்ஙனம் தன்னைத் தவளையாய் சித்தரித்துக் கொள்வது, நமக்கு வழிகாட்டல் மட்டுமன்றி, அவரது ஆழ்ந்த எளிமையையும் காட்டுகிறதல்லவா? இறைவனுடன் ஒன்றவேண்டும் என்ற தீவிர தாகத்தையும் இது காட்டுகிறதல்லவா?*

*அதோ ஒரு செடியில் பூத்துள்ள ஒரு சிறுமலர் ஏதோ பேசுகிறதே! அது என்ன சொல்கிறது என்று கேட்போமோ? அது யாரிடம் பேசுகிறது தெரிகிறதா? இறைவனிடம்தான்!*

*என்னைப் பறித்துக்கொள் என் தந்தையே! தாமதம் செய்ய வேண்டாம்! நான் வாடி வதங்கி மண்ணில் வீழ்ந்து உருக்குலைந்து விடுமுன், உன் திருக்கரத்தினால் என்னைப் பறித்துக்கொள். உன் ஸ்பரிசத்துக்காகத்தான் நான் காத்திருக்கிறேன். நீயே மனது வைத்து என்னை எடுத்துக் கொண்டால் ஒழிய நானாக உன்னிடம் வரமுடியவில்லை. ஆகவே என் அப்பனே, சீக்கிரம் என் கோரிக்கையை நிறைவேற்றுங்கள்! இதோ இன்றைய நாள் முடிந்து கொண்டிருக்கிறது. நான் மடிந்து கொண்டிருக்கிறேன். கணந்தோறும் அழிந்து கொண்டிருக்கிறேன். ஆகவே என்னை எடுத்து உன்னிடம் சேர்த்துக் கொள்" என மலர் கசிந்து உருகி வேண்டுகிறது. கவியரசர் ரவீந்திரரின் கீதாஞ்சலியில் இங்ஙனம் மலர் உருகி வேண்டுவதைக் காண்கிறோம்.*

*அக்ஷரமணமாலையிலோ ஒரு கனிந்த கனி இவ்வாறு வேண்டுகிறது:*

*நைந்தழி கனியான் நலனிலை பதத்தில்*
*நாடி உட்கொள்நலம் அருணாசலா*

***- அருணாசல அக்ஷரமணமாலை, 61***

*"முமுட்சுவத்தில் கனிந்திருக்கும் என்னை இப்போதே நீ உட்கொண்டால் அதுவே நலம். இன்றேல், நான் பயனின்றி அழிவேன்" என்று பாடுகிறார்.*

மிக்கார் வேதவிமலர் விழுங்கும் அக்காரக் கனி என்று ஆழ்வார் பாடுவதை நினைவூட்டுவதல்லவா இந்த எழில் வரிகள்!

உரையாடலைத் தொடர்வோம்.

பகவான் பணியில் தங்கள்,

ராம்மோஹன்

---

## ரமணோதயம் காப்பு நிதி
## தொடரும் நன்கொடையாளர்கள்

| | | |
|---|---|---|
| திருமதி | சுதா கிருஷ்ணன், பெங்களூரு | 5000 |
| திரு | S.N. சாஸ்திரி, சென்னை 28 | 5000 |
| திரு | T.R. நடராஜன், சென்னை 26 | 5000 |
| திரு | ராகவன், சென்னை 4 | 2500 |
| திரு | V. ராமகிருஷ்ணன், சென்னை 24 | 2000 |
| திரு | M. கல்யாணம், பாண்டிச்சேரி | 1500 |
| திருமதி | வரலக்ஷ்மி சீதாராமன், மும்பை | 1001 |
| திரு | C. நாராயணமூர்த்தி, சென்னை 44 | 1000 |
| திரு | J. நடராஜன், சென்னை 29 | 1000 |
| திரு | K. சுவாமிநாதன், சென்னை 10 | 1000 |
| திரு | தாயுமானவன், பெங்களூரு | 1000 |
| திரு | M. சந்திரசேகரன், கம்பம் | 1000 |
| திரு | R. நடராஜன், சென்னை 4 | 501 |

# பஜ கோவிந்தம்

## டாக்டர் சுதா சேஷய்யன், ஜி. ஸ்ரீகாந்த்

*பக்தியிலும் ஞானத்திலும் மிகச் சிறந்து விளங்கும் ஆசார்யர் ஆதிசங்கரர் அருளிச் செய்த பஜ கோவிந்த ஸ்லோகங்களைத் தொடர்ந்து காண்போம்.*

*வீடு வரை உறவு:*

*தனக்காகவும் தன்னைச் சார்ந்தோருக்காகவும், காலையிலிருந்து இரவுவரை ஒவ்வொரு மனிதனும் கடுமையாக உழைக்கிறான். அதிலிருந்து கிடைக்கும் செல்வம்தான் உயர்ந்தது என்றெண்ணும் மனிதனுக்கு அர்த்தத்தின் நிரந்தரமின்மையை எடுத்துரைத்த ஆசார்யர், உடலே பிரதானம் என்று நினைத்துக் கொண்டிருக்கும் மனிதனைப் பார்த்துக் கூறுவதாக இந்த ஸ்லோகம் அமைந்திருக்கிறது.*

*யாவத் பவனோ நிவஸதி தேஹே*
*தாவத் ப்ருச்சதி குசலம் கேஹே*
*கதவதி வாயௌ தேஹாபாயே*
*பார்யா பிப்யதி தஸ்மின் காயே*

*மூச்சுக்காற்று இருக்கும்வரைதான் வீட்டில் உள்ளவர்களும் இந்த உடலின் க்ஷேமத்தைப் பற்றி விசாரிப்பார்கள். மூச்சுக்காற்று நின்றுவிட்டால் மனைவிகூட உயிரற்ற உடலைப் பார்த்து அஞ்சுகிறாள்.*

*செல்வத்தை இழந்த மனிதனின் பரிதாபமான நிலையை இதற்கு முந்தைய ஸ்லோகத்தில் உணர்த்திய ஆசார்யர், அதைத் தொடர்ந்து நிகழும் அவல நிலையை இந்த ஸ்லோகத்தில் விளக்குகிறார். திருமணத்திற்குப் பின் ஈருடல், ஓருயிர் என்று வாழ்ந்தாலும் உயிர்போன கணவனுடைய உடலைக் கண்டு மனைவியும்*

அஞ்சுவாள். என்னுடைய ஆருயிர் கணவன் ஆயிற்றே என்று அவனுடைய உடலை வீட்டில் வைத்துப் பராமரிக்க மாட்டாள். எவ்வளவு சீக்கிரம் முடிகிறதோ, அவ்வளவு சீக்கிரத்தில் அந்த உடலைத் தகனம் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்கிறாள். எவ்வளவோ உணவு வகைகளை உட்கொண்டு, எத்தனையோ அழகு சாதனங்களைப் பயன்படுத்திப் பராமரிக்கப்பெற்ற உடலாக இருந்தாலும், உயிர்போன பின்பு மண்ணோடு மண்ணாகத்தான் போகும் என்பதை உணர்த்துவதுதான் ஆசார்யரின் நோக்கம். பரமனின் ஒரு துளியான ஜீவாத்மா, மூச்சுக்காற்றாக இருக்கும் வரைதான் இந்த உடல் மதிக்கப் பெறுகிறது என்பதைத் தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறார்.

இதைத்தான் பட்டினத்தார் ‘அத்தமும் வாழ்வும் அகத்துமட்டே’ என்று பாடினார்; கவியரசர் கண்ணதாசனும் ‘வீடுவரை உறவு, வீதிவரை மனைவி, காடுவரை பிள்ளை, கடைசிவரை யாரோ’ - என்ற பாடலைப் படைத்தார். உயிரைப் பிரிந்த உடலுக்குக் காடுவரைதான் துணை; மனைவி மக்கள் என்று எத்தனை பேர் இருந்தாலும் அவர்களால் காடுவரைதான் வர முடியும். அதற்குப் பின் இந்த ஜீவன் தனியாகத்தான் பயணிக்க வேண்டும். ஆதரவற்றுத் தனியாகச் செல்லும் ஜீவனுக்கு கோவிந்தன்தான் துணை என்பதை உணர்த்தும் பொருட்டு இந்த ஸ்லோகத்தின் முடிவிலும் ‘பஜ கோவிந்தம் பஜ கோவிந்தம்’ அதாவது கோவிந்த நாமத்தை ஸ்மரணம் செய் என்பதை வலியுறுத்துகிறார்.

ஒருமுறை மஹா ஞானியான பட்டினத்தார் வீடொன்றில் பெரிய கூட்டம் கூடியிருப்பதைக் கண்டார். மரணமடைந்த மனிதனின் உடலைக் கண்டு பெரும்பாலானோர் அழுது கொண்டிருப்பதைப் பார்த்தவர் ‘செத்ததைக் கண்டு அழும் இனிச் சாகும் பிணங்கள்’ என்றுகூறிக் கொண்டே சென்றார். இறந்த

பிணமொன்றைப் பார்த்து இறக்காத பிணங்கள் அழுகின்றன என்ற அர்த்தத்துடன் விளங்கும் இப்பாடலில் எவ்வளவு ஆழமான கருத்து புதைந்து கிடக்கிறது! பஞ்ச பூதங்களாலான இந்த உடல் என்றோ ஒருநாள் அழிந்து போகும். இருக்கும்வரை இந்த உடலைச் சரியாகப் பராமரிப்பது அவசியம்; வேதனைக்குரிய விஷயம் என்னவென்றால் உடலுக்குப் பிரதான்யத்தை அளிக்கும் மனிதன் அதனுள் உறையும் ஆத்ம தத்துவத்தை அறவே மறந்து போகிறான்.

சுக்கிராசாரியாரின் மகளான தேவயானியைத் திருமணம் செய்து கொண்டான் அரசனான யயாதி. அவளையன்றி வேறொரு பெண்ணை நினைவாலும் தீண்ட மாட்டேன் என்று வாக்களித்தவன், தேவயானியின் சேடிப் பெண்ணான சர்மிஷ்டையைக் கண்டு மையல் கொண்டான். வாக்குத் தவறிய யயாதி, சுக்கிரரின் சாபத்திற்கு ஆளானான். அதனால் அவன் சிறு வயதிலேயே தன்னுடைய இளமையை இழக்க நேர்ந்தது. தன்னுடைய தவறினால் நேர்ந்த பிழை என்றாலும் தேகமும் மனமும் இளமையின் சுகங்களை நாடின. தன்னுடைய மகனான புருவிடம் இளமையைப் பெற்றுக் கொண்டு ஆயிரம் வருடம் இளமையின் சுகங்களை அனுபவித்தான்; இருந்தும் முழுமையான திருப்தி கிட்டவில்லை. அக்னியில் இடப்பெறும் நெய்யைப் போன்று ஆசைகளும் அதிகரித்துக்கொண்டே போகும் என்ற உண்மையை அப்போதுதான் யயாதி உணர்ந்தான். ராஜ்ஜியத்தை துறந்தான்; துறவறம் பூண்டு ஞானமடைந்தான். உடலுக்கு முக்கியத்துவம் கொடுப்பது வாழ்க்கையின் உன்னதக் குறிக்கோளை அடைவதற்கான தடை என்பதையே இந்நிகழ்ச்சி நினைவூட்டுகிறது.

எரிந்து சாம்பலாகப் போகும் உடலின் அழகுக்கும் ஆரோக்கியத்திற்கும் எவ்வளவோ பாடுபடுகிறோம். புறத் தோற்றத்தின் அழகுக்கு முக்கியத்துவம் அளிக்கும்

மனிதன் அகத்தின் அழகை மறந்துவிடுவது வருந்தத்தக்க விஷயம். உறவும் மனைவியும் பிள்ளையும் போனபின் நம்முடன் வருவது இறைவன் ஒருவர்தான் என்றுணர்ந்து, அவர்மேல் அன்பும் பக்தியும் செலுத்துவது மிக அவசியம். ஆதிமூலமே என்றழைத்த கஜேந்திரன் குரல் கேட்டு ஓடோடி வந்த பரமனார், தம்மை ஆலிங்கனம் செய்த மார்க்கண்டேயனின் உயிரை எடுக்க வந்த காலனைக் காலால் உதைத்து, மார்க்கண்டேயனை சிரஞ்சீவியாக்கிய சிவனார், ஹஸ்தினாபுரத்திலிருந்து திரௌபதியின் கூக்குரலைக் கேட்டு அவளுடைய மானத்தைக் காப்பாற்றிய கிருஷ்ண பரமாத்மா நம்முடைய பக்தியின் பலனாக நற்கதி அருள்வார். பக்தியின் செறிவு பகவானைப் பணியவைக்கும் என்பது சந்தேகமற்ற உண்மை.

உடலே பிரதானம் என்று கருதும் மனிதனின் சிந்தையில் இறையுணர்வே முதன்மையானது என்ற எண்ணத்தை விதைக்கவே இந்த ஸ்லோகத்தின் முடிவிலும் ‘பஜ கோவிந்தம் பஜ கோவிந்தம்’ என்று சொல்லி இறைவனின் நாமத்தை ஜபிப்பதே அவரை அடையும் வழி என்றுணர்த்துகிறார் ஆசார்யர்.

# இனிவரும் திருநாட்கள் - 2013

| | | | |
|---|---|---|---|
| அக்டோபர் | 5 | சனி | நவராத்திரி தொடக்கம் |
| | 13 | ஞாயிறு | சரஸ்வதி பூஜை |
| | 14 | திங்கள் | விஜயதசமி |
| நவம்பர் | 3 | ஞாயிறு | தீபாவளி |
| | 8 | வெள்ளி | கார்த்திகை தீப விழா தொடக்கம் |
| | 17 | ஞாயிறு | கார்த்திகை தீபம் |
| டிசம்பர் | 19 | வியாழன் | ஸ்ரீ பகவானது 134-வது ஜயந்தி |

# மனதைத் தாலாட்டும் ரமண உணர்வலைகள்!

**பிர. கிரிதர ஜெகதீஷ்**

"காலணிகளை வெளியே கழற்றிவிட்டேன். ஆபரணங்களைப் பாதுகாப்பாகப் பெட்டியில் வைத்து விட்டேன். ஆடைகளைக் களைந்து ஹேங்கரில் தொங்க விட்டேன். உடைமைகள் வேறு சிலவற்றை அவற்றுக்குரிய இடங்களில் வைத்துவிட்டேன். ஓய்வாக அப்படியே உடலையும் படுக்கையில் கிடத்தி விட்டேன். ஆனால் மனதை மட்டும் எங்கே வைப்பது என்று தெரியவில்லை. பொருத்தமான இருப்பிடம் இல்லாமல் அது அலைந்து கொண்டிருக்கிறது" என்று சீன யாத்ரீகர் யுவான் சுவாங் தனது குறிப்பேட்டில் எழுதியிருந்தாராம்.

தென்னிந்தியாவில், தமிழ்நாட்டில், திருவண்ணா மலையில் அள்ள அள்ளக் குறையாத அருள் அக்ஷய பாத்திரமாய் விளங்கிக் கொண்டிருக்கும் ரமண சந்நிதியில் மனதை வைத்தால், அது தேடுதலற்று, எவ்விதத் தேவையுமற்று, இயல்பான தன்னுடைய ஆனந்த நிலையில் அமர்ந்திருக்கும் என்பதை அவர் தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

படைப்புக் கடவுளான பிரம்மா முதலில் தம்முடைய குமாரர்களாக சனகாதி முனிவர்களைப் பெற்றார். அவர்களைக் கொண்டு சிருஷ்டி வியாபாரத்தைச் சிறப்பாகச் செய்ய அவர் திட்டமிட்டிருந்தார்.

ஆனால் கதையோ வேறுவிதமாக அமைந்து விட்டது. சனகாதி முனிவர்களைப் படைக்கும்பொழுது இந்தப் பிரபஞ்சத்தைக் குறித்த முழுமையான ஞானத்தையும் சேர்த்து அவர்களைப் படைத்ததால் பால்ய

பருவத்திலேயே அந்த முனிவர்களுக்கு உலகத்தைக் குறித்த வைராக்கியம் வந்துவிட்டது.

*பரீக்ஷ்ய லோகான் கர்மசிதான் ப்3ராஹ்மணோ*
*நிர்வேத3மாயான்னாஸ்த்யக்ருத: க்ருதேன ।*
*தத்3விஞானார்த2ம் கு3ருமேவாபி4க3ச்சே2த்*
*ஸமித்பாணி: ஶ்ரோத்ரியம் ப்3ரஹ்மனிஷ்ட2ம் ॥*

**- முண்டக உபநிஷத், 2.12**

பொருள்: ஸத்வகுணத்தை அடைந்த முமுக்ஷுவானவன் (முக்தியில் நாட்டம் உள்ளவன்) கர்மபலனாக அடையப்பட்ட இந்த உலகங்களை நன்கு ஆராய்ந்து தெளிந்து வைராக்யத்தை, உலக இன்பங்களில் துச்ச புத்தியை அடைகிறான். செயலினால் உருவாக்கப்படாத பிரம்மன் செயலினால் அடையப்படாதது. ஆகவே ஸமித்தைக் கையில் ஏந்தியவனாக அறிவை அடைவதற்கு மரபுவழியில் வந்த, பிரஹ்மனில் நிஷ்டை கூடிய குருவை அவன் அடைந்துதான் ஆகவேண்டும்" என்று முண்டக உபநிஷத் கூறுகிறது.

மனதை உலகத்திடம் வைக்கக்கூடாது என்ற ஞானம் நன்கு வந்துவிட்டது. பிறகு மனதை எங்கு வைக்கவேண்டும் என்று சனகாதிகள் தந்தையாகிய பிரம்மாவிடம் கேட்டபொழுது, எனக்குத் தெரியாது. அதை நீங்கள் ஸத்குரு மூலமாகத்தான் தெரிந்துகொள்ள முடியும். ஆகவே சதாசிவனைப் பிரார்த்தனை செய்யுங்கள். உங்களுக்குத் தீர்வு கிடைக்கும் என்று கூறிவிட்டார்.

சிவனை ஆழ்ந்து பிரார்த்தனை செய்து குருவைத் தேடியலைந்தபோது, பரமனே தக்ஷிணாமூர்த்தியாய், ஆலமரத்தடியில், முனிசிரேஷ்டனாய் தத்துவ உண்மையை சின்முத்திரை மூலம் போதித்தார்.

பேச்சு எதுவும் இல்லை. விரல்கள் மட்டுமே அசைந்தன. அதிசூக்ஷ்மமான அறிவுடைய சிஷ்யர்களான

சனகாதி முனிவர்களால் 'முடிவு' அறியப்பட்டது. மனதை எங்கு வைக்கவேண்டும் என்ற ஞானம் பிறந்தது.

பிரச்சினை முடிந்தது.

இதைப்போன்றே கலியுகத்திலும் ஒரு அற்புதம் நடந்தது; ரமண சந்நிதியில்! மந்த, மத்யம, உத்தம அதிகாரிகளான அனைத்து சாதகர்களையும் ரமண ஞான மாருதம் தொட்டுத் தழுவிக்கொண்டது!

சம்ஸார தாபம் தீர்ந்தது. எப்படி?

வேதாந்தம் சொல்கின்ற சிரவண, மனன, நிதித்யாஸன அதாவது கேட்டல், சிந்தித்தல், தெளிதல் என்கிற இம்மூன்று சாதனங்களும் ரமண பூமியில் இயல்பாக நடந்தன; இன்றும் நடந்துகொண்டிருக்கின்றன.

"தண்தென்றல் மாருதம் தான்வீசவே விசிறி
கொண்டுஎன்ன காரியம் நீ கூறு."

என்று பகவானே இதற்கு பிரமாணமும் தந்திருப்பது நமது பாக்கியமே.

நம்மைக் குறித்து நாம் ஒரு அபிப்பிராயத்தை வைத்திருக்கிறோம். அது மாயை வயப்பட்டது. நமது நிஜ ஸ்வரூபத்திற்கு எதிரானது. ஆகவே முதலில் நம்மைக் குறித்த சரியான அபிப்ராயத்தை நாம் பெற்றாக வேண்டும்.

சாஸ்த்ரம் அதாவது உபநிஷத் வாயிலாக இறைவன் நம்மைக் குறித்த சரியான அறிவை நமக்கு வழங்குகிறார். ஒரு நாடகத்தை இயக்குகின்ற இயக்குநர் மேடையில் தன்னை இன்னார் என்று காட்டிக் கொள்வதில்லை. அவர் எப்பொழுதும் காட்சிக்கு வருவதில்லை. அனைத்து காட்சிகளுக்கும் ஆதாரமாக திரைமறைவில்தான் அவர் எப்பொழுதும் இருப்பார். அவருடைய அறிவு மட்டும் நாடகத்தின் வாயிலாக வெளிப்பட்டுக் கொண்டிருக்கும்.

ஆனால் நாடகத்தில் சில முக்கிய கதாபாத்திரங்களைத் தாமே ஏற்று நடித்தும் தனது பங்கை ஒரு இயக்குநர்

*செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்படும். அப்பொழுது அவர், தம்முள்ளே இயக்குனராகவும், வெளியே நடிகராகவும் செயல்படுகிறார்.*

*பகவான், இறைவன் சாஸ்த்ரத்தின் மூலமாக நம்மைக் குறித்த சம்யக் ஞானத்தை நமக்கு வழங்கினாலும், சிற்சில காலங்களில் அவர் வழங்கிய ஞானத்திற்கு ஏற்ப வாழ்ந்து காட்டவும் மண்ணுலகத்திற்கு ஜீவவேடம் ஏற்று திறம்பட நடித்தும் காட்டுகிறார்.*

*ஞானம், ஞானநிஷ்டை (வாழ்க்கை முறை) இந்த இரண்டு அம்சங்களும் ரமண ஜீவிதத்தில் கதம்பம்போல் இணைந்து காணப்படுகிறது.*

*பகவான் ரமணரின் ஜீவித நிகழ்வுகள் உபநிஷத் போதனைகளை எளிதாக சாதனை ஆக்கி விடுகின்றன.*

*ப⁴த்ரம் கர்ணேபி⁴ ச்ருணுயாம தே³வாஹா!*

*ஓ தேவர்களே.. காதுகள் மூலமாக மங்கலமானதைக் கேட்போமாக! என்று வேதம் ஒரு விண்ணப்பத்தை முன் வைக்கிறது. நல்ல விஷயங்களைக் கேட்பதற்கு எங்களுக்குப் புண்ணியம் வேண்டும். பிறகு நல்ல விஷயங்களைக் கேட்டு அதை உள்வாங்கிக் கொள்வதற்கு எங்களுக்குப் பக்குவம் வேண்டும், என்பது இந்தப் பிரார்த்தனையின் உட்பொருள்.*

*'ஸஹஜ நிஷ்டைக்கும் என் சிந்தைக்கும் வெகுதூரம்' என்றார் தாயுமானவர். விருப்பு வெறுப்புகள் அடர்ந்த மனம் உலகத்தைத்தான் புருஷார்த்தமாகக் குறிவைக்கும். மெய்ப்பொருள் அறிவு அங்கு நுழையாது.*

*ரமண சந்நிதியில் சாதகர்களின் ஐயங்களுக்குரிய பதில் நேரிடையாக சில நேரங்களில் கிடைத்துவிடும். சில நேரங்களில் எவ்வளவுதான் பிரயாசைப்பட்டுக் கேட்டாலும் மௌனமே பதிலாய் நிற்கும்! நான் தருகின்ற உபதேசத்தை ஏற்கின்ற மனப்பக்குவம் உனக்கு இல்லை.*

*அதை முதலில் சம்பாதித்துக்கொள்' என்கிற மறைமுக உபதேசம் நடந்துவிடும். அது சாதகனின் உள்ளத்திலும் எதிரொலிக்கும்.*

*ஸ்கந்தாசிரமத்தில் பகவான் இருந்த சமயம். நன்கு படித்த இளைஞர் ஒருவர் பகவானைத் தரிசிக்க வந்திருந்தார். தத்துவக்காமுற்று பகவானிடம் ஏதேதோ ஐயங்களை அடுக்கிக்கொண்டே சென்றார். சொற்பமான அன்பர்கள் கூட்டம் உடனிருந்தது. பகவான் பதிலேதும் சொல்லாமல் மௌனமாய் இருந்தார். பிறகு மெல்ல எழுந்து அருகிலுள்ள மரத்திலிருந்து ஒரு சிறு குச்சியை வெட்டி எடுத்தார். கத்தியால் அதை மேலும் ஒதுக்கிச் சீராக்கினார். ஒரு அழகிய கைத்தடியை சிறிது நேரத்தில் தயார் செய்தார்.*

*"மலைப்பாதையில் போகும் சமயங்களில் ஊன்றுகோல் தேவைப்படுகிறது. தடுமாற்றமில்லாமல் பாதுகாப்பாக நடந்து செல்ல இது துணை செய்யும் அல்லவா?" என்று அந்த இளைஞனிடம் புன்னகையுடன் கேட்டார்.*

*தேவையான உபதேசம் நடந்துவிட்டது. இளைஞன் புரிந்துகொண்டான்.*

*பகவான் கர்மயோகத்தைப் போதிக்கிறார். "முதலில் சரியான பாத்திரமாகு. பிக்ஷை தானாகக் கிடைக்கும். மனத்தூய்மை இல்லாமல் ஒரு அங்குலம்கூட அசைய முடியாது. மன அழுக்குகளான விருப்பு, வெறுப்புகளின் அடர்த்தியைக் குறை. அப்பொழுதே உபதேசங்கள் உன்னை நிறைக்கும். ஈச்வர அர்ப்பண புத்தியோடு உனது கடமைகளைச் செய். மேற்கொண்டு நிகழ வேண்டியவைகளை பகவான் பார்த்துக் கொள்வார்."*

*மேற்கண்ட அத்தனை விபரங்களும் உள்ளுணர்வாக இளைஞனின் மனதில் வழங்கப்பட்டன. இளைஞன் மௌனமாக விடைபெற்றுக் கொண்டான்.*

பகவானின் மௌனம் அலட்சியப்படுத்துதல் அல்ல. அது ஆத்மசாதகர்களின் உள்ளத்தை லட்சியப் படுத்துகிறது. மனதின் ஒரு சிறு பகுதியை ரமண சந்நிதியில் வைத்து கடமையாற்றும்பொழுது மனம் தூய்மையடைகிறது. பாரம் குறைந்து பரிபாகம் கிடைக்கிறது. பிறகு இதயத்தின் ஜன்னல் கதவுகள் திறந்து கொள்கின்றன. பிறகு எல்லா இடத்திலும் ரமண சந்நிதியை உணர்கின்ற சக்தி மனதிற்குக் கிடைத்து விடுகிறது.

சாஸ்த்ரங்கள் ஜீவ பிரம்ம ஐக்கியத்தைத்தான் மையமாகக் கொண்டு பேசுகின்றன. பூமியில் நடப்பட்ட மூங்கில் கதவு நன்றாக கூறு குத்தவில்லையென்றால் உறுதியாக நிற்க முடியாமல் ஆட்டம் கொள்வதுபோல ஸம்சார வாசனை தலையெடுக்கும்பொழுது ஆத்மபோதம் மறைந்துபோய் ஜீவபோதம் செயலுக்கு வந்துவிடுகிறது.

'நாயமாத்மா பலஹீனேன லப்யஹ'

இந்த ஆத்மா பலஹீனனால் அடையப்படுவதன்று என்ற உபநிஷத் வாக்கியத்திற்கேற்ப நொங்கும் நுரையுமாகப் பொங்கிப் பிரவாகிக்கும் லௌகீக வியாபாரங்கள் பிராரப்த வசத்தால் தலையெடுக்கும்பொழுது பிரம்ம நிஷ்டை நழுவிப் போய்விடுகிறது.

சாதகனின் கைகள் பற்றிக்கொள்ள ஒரு பற்றுக்கோலை நாடும்பொழுது ரமணரின் உபதேசங்கள் அங்கே உதவிக் கரங்களாய் அமைந்து அவர்களைக் கரையேற்றி விடுகின்றன.

'எது நடந்தால் என்ன? எங்கு இருந்தால் என்ன? நீ எப்படியிருக்கிறாய் என்ற உன் இயல்பு நிலையில் கவனம் வைப்பதே உன்னுடைய கடமை' என்பது பகவான் ரமணரின் தீர்க்கமான போதனை.

*அறிவுஉறும் தன்னை அறியாது அயலை*
*அறிவது அறியாமை அன்றி - அறிவோ*
*அறிவுஅயற்கு ஆதாரத் தன்னை அறிய*
*அறிவு அறியாமை அறும்.*

*- உள்ளது நாற்பது, 11*

பொருள்: அறிவு வடிவாகிய தன்னை அறியாமல் தனக்கு அந்நியமான பிறவற்றை அறிவது அறிவல்ல; அது அஞ்ஞானமே ஆகும். அறிவு, அறியப்படும்பொருள் இவ்விரண்டுக்கும் ஆதாரமாகிய 'நான்' என்னும் தோற்றத்தின் உண்மையை அறியும்பொழுதே மற்ற அறிவு, அறியாமை என்கிற இருமை அழியும்.

இன்னும் அறியவேண்டும்; இன்னும் அனுபவிக்க வேண்டும், இன்னும் அடைய வேண்டும் என்கிற ரூபத்தில் ஜீவனின் அக்ஞானத்வம் வெளிப்பட்டுக் கொண்டேயிருக்கிறது.

கொதிக்கும் உலையில் ஒரு பிடி அரிசியைப் போட்டதும் கொதி அடங்கி சோற்றுப்பானை அமைதி பெறுவதுபோல, 'நான் யார்' என்ற தண்முக விசாரம் அனைத்துத் தேடல்கள், ஏக்கங்கள், நோக்கங்களை அடக்கி ஜீவனை அவனுடைய இயல்பாம் சொரூபதத்தில் அமைதியுறச் செய்கிறது.

*ஊர்சுற்று உளம்விடாது உனைக்கண்டு அடங்கிட*
*உன் அழகைக்காட்டு அருணாசலா*

*- அருணாசல அக்ஷரமணமாலை, 8*

பக்தி மொழியில் அந்தர்முக நாட்டத்தை பகவான் எவ்வளவு பக்குவமாய் எடுத்து வழங்குகிறார்!

"பகவான்! விஷயம் நன்கு விளங்கிவிட்டது. ஆனால் அதில் நிஷ்டை கூட முடியவில்லை. தங்களைப்போல ஸஹஜானந்த ஸ்திதியில் நிற்க என்ன செய்யவேண்டும் என்று தாங்களே அருளவேண்டும்."

வேத வேதாங்கங்களைக் கற்றுத் தேர்ந்த பண்டிதர் ஒருவரிடமிருந்து மேற்கண்ட விக்ஞாபனம் (வேண்டுகோள்) பகவான் சந்நிதியில் வைக்கப்பட்டது.

பகவானின் கருணை உள்ளம் அவரைக் கசிவுடன் நோக்கியது.

"உங்களுடைய நிழலை எவ்வளவுதான் ஆழமாகப் பூமியைத் தோண்டி அதில் வைத்துப் புதைத்தாலும், நிழலைப் புதைக்க முடியுமா? அது சாத்தியமா? நிழலைப் பொய் என்று புரிந்து கொண்டு அதை அலட்சியம் செய்வதுதான் புத்திசாலித்தனம். ஒன்றும் செய்யாமல் இருப்பதுதான் இவ்விஷயத்தில் உங்களுக்குக் கைகொடுக்கும். நிழலை ஒழித்துத் தள்ள நீங்கள் எடுக்கிற ஒவ்வொரு முயற்சியும் அதற்கு மேலும் புஷ்டியையும், போஷாக்கையும் தந்து அதை நன்கு கொழுக்கச் செய்து விடும்.

விஷயம் விளங்கி விட்டது. ஆனால் அதில் நிஷ்டை கூட முடியவில்லை என்று கூறுகிறீர்கள். இப்படி விளங்கிவிட்டது; ஆனால் முடியவில்லை என்று கிலேசிப்பது மனதின் தர்மங்கள். நீங்கள் இவைகளுக்கு அப்பாற்பட்டவர். இப்படிப்பட்ட விவகாரங்களுக்கு ஆதாரமான 'நான்'-ஐ மட்டும் குறிவையுங்கள். கவனம் முழுவதையும் உங்கள் மீது மட்டும் பதித்து வையுங்கள். அதுவே குரு க்ருபை. அதுவே ஈச்வர க்ருபை."

ஸம்சார முடிச்சை முழுவதுமாக அவழ்த்து ஆத்ம நிஷ்டையில் நம்மை நிறுத்துகின்ற நிதித்யாஸனபரமான அற்புதமான வழிகாட்டுதலாக பகவானின் மேற்கண்ட உபதேசம் அமைந்திருக்கிறது.

கட்டவிழ்க்கப்பட்டுச் சுற்றித் திரியும் காளை மாடுபோல, சித்த சுத்தியை அடைந்து வைராக்ய சீலர்களாய் உலகத்தில் ஒட்டாமல் அதேசமயம் இறைவனை ஒருமுறையேனும் தரிசிக்க வேண்டும்; இறைவனை உளமாரக் கண்டு அனுபவிக்க வேண்டும்

*என்று ஏங்கும் பக்குவ சீலர்களுக்கு பகவானின் பதில் ஒரு மாற்றுப் பாதையாய் விளங்குகிறது.*

*இறைவனை, பிரம்மத்தை, ஆத்மனை ஒரு அனுபவ விஷயமாகக் கருதுவதை பகவான் அடியோடு நிராகரிக்கிறார். ஒருபொழுதும் முன்னிலைப்படுத்த முடியாத புதிராக ஆத்மன் விளங்கிக் கொண்டிருக்கிறது. அனைத்து அனுபவங்களுக்கும் ஆதாரமான 'அனுபவிப்பவனாக' 'இறைவன்' அல்லது 'பிரம்மம்' விளங்கிக் கொண்டிருக்க, அதை ஒரு அனுபவப்பொருளாக, விஷயமாக மாற்ற முயற்சிப்பது அறியாமையே! என்பது பகவானின் தீர்மானம்.*

*முன்னிலை ஏதுமில்லாத சுகம் முற்றச்செய்தே*
*என்னைப் பற்றிக் கொண்டானடி*

*என்று தாயுமானவர் கூறுவது போல அது முன்னிலைக்கு வராத தன்மை சொரூபமாக (*objectless awareness*) இருக்கிறது.*

*பிறகு பிரச்சனை என்னவென்றால் ஜீவனின் கவனத்தை உபாதி கர்மங்கள் களவாடி விடுகின்றன. மிட்டாயின் (இனிப்புப் பண்டங்கள்) இனிப்பை மறந்துவிட்டு குழந்தைகள் அவற்றின் வடிவங்களுக்கு முக்கியத்வம் கொடுத்து ரகளையில் ஈடுபடுவதுபோல், சொரூபத்தை மறந்து அவற்றோடு பொய்யாகத் தோன்றிக் கொண்டிருக்கும் உபாதிக்கு (*medium*) முக்கியத்வம் அளித்து ஸம்ஸார வழக்கு தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது.*

*ரமணரின் தீர்ப்பு இந்த வழக்கை முடித்து வைக்கிறது.*

***இருக்கும் இயற்கையால் ஈச ஜீவர்கள்***
***ஒருபொருளே யாவர் உந்தீபற***
***உபாதி உணர்வேவேறு உந்தீபற***

***- உபதேச வுந்தியார், 24***

*ஆற்று நீரும் குடத்து நீரும் அளவில் வேறுபட்டாலும் ருசியில் ஒன்றாகவே இருக்கின்றன. ஆற்றுநீரில் படகு விடலாம். ஆனால் குடத்து நீரில் அப்படிச் செய்ய*

முடியாது. ஆனால் நீரின் முக்கிய பயன்பாடான தாகத்தைத் தீர்க்கும் குளம் ஆற்றுநீருக்கும், குடத்து நீருக்கும் பொதுவாகாது.

அதுபோல அர்த்த காமங்களை தர்மப்படி நிறைவேற்றிக்கொள்ள நமக்கு அந்நியமாக ஒரு சகுன பிரம்மத்தைத் தேடி ஓடுகிறோம். இது நியாயமானதுதான். ஆனால் மோக்ஷம் என்ற முழு நிறைவுக்கு நாமாகவே விளங்கிக் கொண்டிருக்கும் நிர்குணமான, அப்ரமேயமான, ஸத் சொரூபமான ஆத்மனை அறிவதைத் தவிர்த்து மற்றோர் மார்க்கம் இல்லை.

குடம், அகன்று இரு கரைகள் கொண்ட ஆறு இந்த உபாதிகளை கவனத்தில் இருந்து கழித்து சொரூபத்தில் ஒன்றாக விளங்கிக் கொண்டிருக்கும் 'நீரில்' மட்டும் நாட்டம் வை என்று பகவான் ரமணர் கூறுகிறார்.

ஏற்றிருக்கும் வேடத்தைப் பொருத்து ஒரு நபரே இருவேறு கதாபாத்திரங்களாகக் காட்சி தருவதுபோல சச்சிதானந்தமாகிய 'நானே' மாயை, அவித்யை என்ற இருவேறு உபாதிகளால் ஈச்வரனாகவும், ஜீவனாகவும் தோன்றிக் கொண்டிருக்கிறது என்பது பகவானின் முடிவு.

உலகம் பிரச்சினைகளுக்கு தீர்வைத் தேடிக் கொண்டிருக்கிறது. பகவானின் உபதேசங்களோ பிரச்சினையே இல்லை என்கிற விதத்தில் தீர்வைக் காட்டிக் கொண்டிருக்கின்றன.

சற்று கவனம் தந்து நோக்கினால் கங்கு கரைகாணாது எவ்விடத்திலும் ரமண சந்நிதியை நம்மால் உணர முடியும். நமது முயற்சியும், பகவானின் அருளும் மேற்கொண்டு நிகழ வேண்டியதை கவனித்துக் கொள்ளும்.

ரமண ஸ்மரணையில் நம்மை அர்ப்பணிக்க வேண்டும்.

தேவை அதுவே!

# நான் யார் தெரியுமாவிலிருந்து நான் யார் வரை

**டாக்டர் ஏ.வி. ராஜகோபாலன்**

*பகுதி 18*

*இன்பத்தை நாடுவது மனித இயல்பு. இது இரு வகைப்படும். ஒன்று வெளியிலிருந்து புலன்கள் மூலமாக நம்மை இன்பத்தில் ஆழ்த்தும் காரணங்கள். இது சிற்றின்பம் எனப்படும். வெளிக்காரணம் விலகிவிட்டால், இன்பமும் விலகிவிடும். மேலும் காரணங்கள் மூலமாகக் கிட்டும் உணர்வு இன்பம் மற்றும் துன்பம் என்று இரு வகையிலும் அமையலாம். வாழ்வில் பெரும்பாலோர்க்கு இன்பத்தை விட துன்பமே அதிகம் நேரிடுகிறது என்பது கண்கூடு.*

*மேலைநாட்டுச் சிந்தனையாளரான* Eckhart Tolle *இதைச் சுருக்கமாகத் தெளிவுபடுத்துகிறார்.*

"Pleasure is always derived from something outside you, whereas joy arises from within."

*இக்கருத்தை பிரம்ம சூத்ரம், உபநிஷதங்கள், பகவத் கீதை, தமிழ் சித்தாந்த நூல்கள் போன்ற பலவற்றால் ஆராய்ந்தோம். இப்பொழுது அந்தப் பேரானந்த நிலை எப்படியிருக்கும் என்பதை வேறு கோணத்தில் காண்போம்.*

*நாரத பக்தி சூத்திரம். 84 சூத்திரங்களே கொண்ட சிறிய நூல். ஆனால் தத்துவ அளவில் மிகப் பெரியது. பக்தியினால் கிடைக்கும் பேரின்பம் எப்படி இருக்கும் என்பதை இந்நூல் தெளிவுபடுத்துகிறது.*

*சூத்திரம் 54*

*குணரஹிதம் - குணங்கள் அற்றது.*

*காமனாரஹிதம் - லாபத்தையோ, பிரதிபலனையோ எதிர்பார்க்காதது.*

*ப்ரதிக்ஷண வர்தமானம் - எக்கணமும் வளர்ந்து கொண்டே இருக்கும் தன்மை படைத்தது.*

*அவிச்சின்னம் - பூரணமானது (இடைவெளி இன்மை).*

*சூக்ஷ்மதரம் - நுண்ணியது.*

*அனுபவம் - அனுபவத்தால் உணரப்படுவது. (கண்டவர் விண்டதில்லை).*

*இப்பேற்றை அடைந்தவன் எந்நிலையில் இருப்பான் என்று உணர்த்துகிறது வேறொரு சூத்திரம்.*

*சூத்திரம் 6*

*யஜ் ஜ்ஞாத்வா மத்தோ பவதி*

*ஸ்தப்தோ பவதி, ஆத்மாராமோ பவதி.*

*பொருள்: அதை உணர்ந்தவன் பெரும் பித்தனாக, பரவச நிலையை எய்தியவனாக ஆகின்றான். ஆத்மானந்தத்தைப் பெறுகிறான்.*

*'யஜ் ஜ்நாத்வா' என்ற சொல் ஆழ்ந்த பொருள் உடையது. உயர்திணைச் சொல்லாகிய ஆண், பெண் பால்களில் குறிப்பிடாமல், இந்நிலையை 'அது' என்றே நாரதர் கூறுகிறார். இந்நிலை அடைந்தவன் பிரம்மத்தின் அருகாமையில் இடம் பிடித்து விடுகிறான். பார்ப்பதற்குப் பித்தனைப்போல் காணப்படுகிறான். உள்ளேயோ ஆனந்தப் பரவசம். இதுவே உபநிஷத்துகள் உரைத்த "பூமா" என்ற நிலை. இந்த ஆனந்தம் நிலைத்து நிற்பது. காரண-காரியங்களுக்கும், புறத்தே நடக்கும் செயல் களுக்கும் அப்பாற்பட்டது. ஆகையாலே இது பேரின்பப் பெருநிலை என்று போற்றப் படுகிறது.*

இந்நிலையை அடைய ஏங்கிப் பரிதவித்துப் பின்னர் அந்நிலையை அடைந்தவர் குலசேகரப் பெருமாள். சேரநாட்டு மன்னனாகிய இவர் தமிழகம் முழுவதுமே ஆண்டார் என்பது

“கொல்லிக் காவலன், கூடல் நாயகன்
கோழிக்கோன் குலசேகரன்”

என்று ‘பெருமாள் திருமொழி’ பாசுர வரிகளால் புலப்படுகிறது. இப்பெருமானுக்குப் பெரிய துன்பம், ராஜ்ய பாரமும், அரியணையும் அதன் மூலம் கிடைக்கப் பெற்ற உயர்ந்த உலக வாழ்வுமேயாம். இவர் விரும்பிய தெல்லாம் திருவரங்கம் சென்று அரங்கனைக் காண வேண்டும் என்ற அந்தப் பெருஞ்செல்வம் ஒன்றுதான். தினந்தோறும் இவர் சேர நாட்டிலிருந்து அரங்கம் நோக்கிப் பயணம் செய்வாராம். இவர் சென்று விட்டால் பின்னர் நாடு திரும்பவே மாட்டார். ராஜ்யம் நிச்சயம் அழிந்துவிடும் என்று அஞ்சிய மந்திரிமார்கள், அவர் கிளம்பும் போது, ஒரு அடியார் கூட்டம் இராமகதையைச் சொல்லி வருமாறு ஏற்பாடு செய்வார்களாம். அவர்களை வரவேற்று, அந்தப் பக்திப் பரவசத்தில் குலசேகரர் ரங்க யாத்திரையை மறந்து விடுவாராம். இதனால்

“யஸ்ய நகரே ரங்க யாத்ரா
தினே தினே”

என்று ஒவ்வொரு நாளும் ரங்கயாத்திரை நடைபெறுமாம், அந்த நகரில்.

ரங்கனைத் தரிசிக்க இயலவில்லையே என்ற தாக்கம் ஆழ்வாரின் வரிகளில் பொங்கி வருவதைக் காணலாம்.

திருவரங்கப் பெருநகருள் தெண்ணீர்ப் பொன்னி
திரைக்கையா லடிவருடப் பள்ளி கொள்ளும்
கருமணியைக் கோமளத்தைக் கண்டு கொண்டுஎன்
கண்ணிணைக ளென்றுகொலோ களிக்கும் நாளே.

மற்றொரு பாசுரத்தில் “மாயோனை மணத்தூணே பற்றி நின்றென் வாயார என்றுகொலோ வாழ்த்தும்

*நாளே!"* என்று சோகத்துடன் பேசுகிறார் குலசேகரப் பெருமாள். மணத்தூண் என்பது அரங்கத்தில் உள்ள தூண். இறைவனைக் கண்ட களிப்பில், உடல் பதற, உள்ளம் உருக, நிலைதடுமாறி தூணைப் பற்றி நிற்கும் நிலையை மனக்கண்ணினால் காண்கிறார். பிற பக்தர்கள் உலக வாழ்வில் முழுவதும் ஈடுபட்டவர்கள். ரங்கனைக் கண்டு உள்ளம் பதறாவர்கள். அவர்களைப் போல் அல்லாமல், இவரால் இறைவன் சந்நிதானத்தில் நிற்கக்கூட இயலாமல் போகின்றது. அதற்குக் காரணம் உள்ளத்தில் ஏற்பட்ட பேரின்ப பக்திநிலை.

இறுதியில், திருவரங்கம் சென்று ரங்கநாதனைத் தரிசிக்கும் பேறு இவருக்கும் கிட்டுகிறது. மனம் முழுவதும் இறையுணர்வு நிறைந்து இருக்க "அரங்கனுக்கு அடியார்கள் ஆகி அவனுக்கே பித்தராம். அவர் பித்தர் அல்லர். மற்றையோர் முற்றும் பித்தரே" என்று உண்மை அடியார்களின் நிலையைப் படம் பிடித்துக் காட்டுகிறார் பெருமான். இதில் யார் பித்தர் என்ற கேள்வி எழுகிறது. இறையின்பத்தில் சிற்றின்பத்தை ஒழித்த அடியார்கள் பித்தர்களா, அல்லது உலகியல் நாட்டத்தில் பிரம்மத்தை இழந்த சாமானியர்கள் பித்தர்களா. இதுவே நாரதர் சூத்திரத்தில் சுருங்கக் கூறிய "மத்த:" என்ற சொல்லுக்கு விளக்கம்.

இந்த ஆத்மானுபவமே ரமணர் போன்ற மகான்கள் அடைந்த நிலை. இந்த நிலையை ஞான மார்க்கத்தாலும் பெறலாம். உளமார்ந்த பக்தி நிலையிலும் இந்தப் பரவசம் கைகூடுகிறது. இந்த நிலையை அடைந்த ஜீவன் சாயுஜ்யம் எனப்படும் உன்னதப் பேறு அடையப் பெறுகிறான். இது கலிகாலத்தில் அமையுமோ என்ற அச்சம் பலருக்கும் உண்டு. கிருத யுகம், திரேதா யுகம், துவாபர யுகம் போன்ற முந்தைய காலங்களில் அறநெறி செழித்துக் காணப்பட்டது. ஞானம் கைகூடுவது அக்கால கட்டங்களில் எளிது. இந்தக் கலியோ கொடுமையான

*பாப காரியங்களுக்கு சித்தத்தை ஏவும் சக்தி படைத்தது. இந்தக் காலகட்டத்தில் ஞான-பக்தி மார்க்கங்கள் மூலம் பரம்பொருளை அடைவது என்பது சாத்தியமன்று என்ற தயக்கம் விரவிக் காணப்படுகிறது. இது சரியன்று. இன்றும்கூட பல சாதகர்கள் யோகம், தியானம் முதலிய மார்க்கங்களால் இறைத் தன்மையை அடைகின்றனர். பஜனைக் கூட்டங்களில் தன்னை மறந்த ஈடுபாட்டைக் காணமுடிகிறது. கலௌ கலு பவிஷ்யந்தி நாராயண பராயண:" என்று புராணங்கள் இந்தக் கலி காலத்தில்தான் நாராயணன்பால் சித்தத்தை வைத்த சான்றோர்கள் அமைவார்கள் என்று முன்பே எழுதி வைத்தன. 'பவிஷ்யந்தி' என்று எதிர்கால வினைச் சொல்லைப் பயன்படுத்தியுள்ளது நோக்கத் தக்கது. கலிகால நிலை, முந்திய யுகத்திலேயே நிச்சயம் செய்யப்பட்டது! இதுவே பக்தியின் சிறப்பு. இதை நாரத பக்தி சூத்திரம் விளக்கும்:*

*"சாந்திரூபாத் பரமானந்த ரூபாச்ச"*

***சூத்ரம்: 60***

*இந்த உணர்வு சாந்திமயமானது. இதுவே பரமானந்த ரூபம்.*

*இந்த இறையுருவம் சிவபுராணத்தில் விளக்கப் படுகிறது.*

'நோக்கரியே நோக்க நுணுக்கரிய நுண்ணுணர்வே'

*இந்த நுண் உணர்வு அனுபவத்தால் பெறக்கூடியது; அறிவால் அன்று. ஆனால் நூலறிவும் அனுஷ்டானங்களும் இந்த உணர்வை அடையத் துணைபோகும். 'சத்சங்கம்' என்ற நல்லோர் உறவு, பெரிதளவுக்கு இதற்குப் பயன்படும்.*

*சுந்தரர், சிவபெருமானுக்கு மிகவும் நெருக்கமானவர். 'வன்றொண்டர்' 'தம்பிரான் தோழர்' என்றெல்லாம் புகழப் படுபவர். அவர் தன் தொண்டர் குழாமுடன் தலயாத்திரை செய்கையில் ஒரு சமயம் ஒரு*

*வனாந்திரத்தைக் கடக்க நேரிட்டது. அவ்வமயம் "சுந்தரா! என்னை மறந்தனையோ?" என்ற வாக்கு அவருக்குக் கேட்டது. அங்கு அருகாமையில் ஆலயம் ஒன்றும் தென்படவில்லை. மேலும் கேட்டபோது, ஒரு பழமையான கோயில், அங்கு பூசைகள் அற்று, மண் மூடிக் கிடப்பதாக அறிந்தார். அந்த ஆலயத்தை அடைகிறார். அங்குள்ள சிவலிங்கம் தூசி படிந்து காணப்பட்டது. ஆனால் பக்தியில் ஊன்றிய சுந்தரப் பெருமானுக்கு அது பொன்னிறமாகத் தோன்றியது. அதை அவர் விளக்குவார்.*

*பொன்னார் மேனியனே*
*புலித்தோலை அரைக் கசைத்து*

*மற்றவர் கண்ணுக்குப் புழுதி படைந்த மாசுடன் காணப்பட்ட சிவலிங்கம் இந்த அடியாருக்கு மட்டும் பொன்னார் மேனியாகக் காணப்பட்டதன் காரணம் என்ன? உள்ளத்தின் உயர்வும் இறைவன்பால் தன்நிலை இழத்தலுமேயாம்.*

*இந்த நிலைக்கு மற்றுமோர் சீரிய உதாரணம் இராமலிங்க சுவாமிகள் ஆவார். சிதம்பரத்திற்கு அருகில் அமைந்துள்ள மருதூரில் 1823-ஆம் ஆண்டு அவதரித்த சுவாமிகள், 'அருட்பெருஞ் சோதி தனிப்பெருங் கருணை' என்ற மந்திரச் சொற்களை நமக்கு அளித்தவர். இவர் வாழ்க்கை சிவமயமானது. சோதியை உள்ளே கண்டுவந்த பெருந்தகையார். இவர் பாடிய பாடல்கள் பல. அவை திருவருட்பா என்ற தொகுப்பில் காணக் கிடைக்கும் வேறு சில வசன நூல்களும் இவரால் எழுதப் பட்டன. இவரால் இயற்றப்பட்ட ஆனந்தக் களிப்பு, மெய்யருள் வியப்பு, ஆனந்த மேலீடு, காட்சிக் கண்ணி போன்ற பாடல்கள் இந்த ஆனந்த மேலிட்டில் எழுந்தவை. இவற்றுள் "காட்சிக் கண்ணி" என்ற தொகுப்பை மட்டும் கண்டு மகிழ்வோம். இதன் பல்லவி,*

*ஆணிப் பொன்னம்பலத்தே கண்ட காட்சிகள்*
*அற்புதக் காட்சியடி - அம்மா*
*அற்புதக் காட்சியடி*

என்று அமைந்துள்ளது. இது யதுகுல காம்போதி ராகத்தில் அமைக்கப்பட்டு அட தாளத்தில் பாடப்படுவதாக அறிகிறோம். பின் சரணங்களை அவர் சொற்களிலேயே கண்ணிகளை சுருக்கிக் காண்போம். இதற்கு விளக்கவுரை தேவையில்லை. எளிமையான சொற்களில் அமைந்துள்ளன:

*- சோதி மலையொன்று தோன்றிற்று அதிலொரு*
*வீதி உண்டாச்சுதடி*
*- வீதியிற் சென்றேன் அவ்வீதி நடுவொரு*
*மேடை இருந்ததடி*

அந்த மேடை மேலிருந்த கூடத்தில் இவர் அற்புதக் காட்சிகளைக் கண்டு உவகை கொள்கிறார். மேலும் அவருடைய இறுதிக் காட்சி விளக்கத்தை மட்டும் சுருக்கிக் காண்போம்:

*- அத்திருவாயிலில் ஆனந்த வல்லியென் அம்மை இருந்தாளடி*
*- அம்மையைக் கண்டேன் அவனருள் கொண்டேன் அமுதமும் உண்டேனடி*
*- தாங்கும் அவள்அருளாலே நடராசர் சந்நிதி கண்டேனடி*
*- சந்நிதியிற் சென்று நான் பெற்ற வேறது சாமி அறிவாரடி*

(குறிப்பு: இந்தக் கண்ணிகளில் இரண்டாம் வரி இருமுறை திரும்பவும் பாடப்படுகிறது. சுருக்கம் கருதி அது இங்குத் தரப்படவில்லை).

இந்தக் காட்சி ஒரு அத்புதம் அல்லவா! நம் போன்றோர்க்கு மெய்க்கூசல் தரும் அற்புத நிகழ்வு, எளிய சொற்களில் பிரவாகமாக வருகிறது. இதுவே ஆனந்தக் களிப்பு. ஈடு இணையற்ற பிரம்ம ஞானம். தைத்தீரிய உபநிடதத்தில் ப்ருகு என்ற இளைஞன் தவத்தால் அடையும் பெரும் ஞானஒளி.

*"ஆனந்தோ பிரும்மேதிவ்யஜானாத்" - பிருகுவல்லி*

*சம்பந்தர் சீர்காழியில் ஞானப்பால் ஊட்டப் பெற்றவராய் "தோடுடைய செவியன்" என்ற பதிகத்தால் பாடியது இக்காட்சியே.*

*நாவுக்கரசர் திருவையாறில் கைலாயக் கோலத்தைக் கண்டு,*

*"கண்டேனவர் திருப்பாதம்*
*கண்டறியாதனக் கண்டேன்"*

*என்று புல்லரிக்கப் பாடியதும் இந்நிலையில் இருந்தேயாகும்.*

*ஞானமும் பக்தியும் கர்மமும் வேறு வேறு வழிகளில் பயணித்து இறுதியில் முடிவு பெறுவது இந்தப் பரவச நிலையில்தான். ஆதிசங்கரர் திருச்செந்தூரில் முருகனைப் பார்த்தார். அவன் வயப்பட்டார். சொற்கள் தாமாகவே வெள்ளம்போல வரத் துவங்கியது. "சுப்ரமணிய புஜங்கம்" என்ற சிறந்த தோத்திரம் உருவானது. அத்வைத சிகாமணியான சங்கரரும் லயித்தது இந்த ஆனந்த ஜோதியில்தான். தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் மற்றுமுள்ள இந்திய மொழிகள் அனைத்திலும் பேதமின்றிப் போற்றப்படுவது இந்நிலையே.*

*"நான்" என்பது இந்தப் பேரின்ப வடிவேயாகும். இந்நிலையை எய்தியவனே பிரம்ம ஞானியாகிறான். இதைப் புரிந்து தெளிவதே உய்ய, உன்னத மார்க்கம்.*

---

## ரமணோதயம்

Voluntary Services

| | |
|---|---|
| K. *சுரேஷ் ஜானகிராமன்* | *9444127770* |
| *ராஜேஷ்* M.S. | *9840075778* |
| *வஸந்தா ராகவன்* | *9445432335* |

# திருரமணக் குறள்

## தாயுமானவன்

41 “நான்ஆர்” எனஉணர்தல் எங்ஙனம்? உண்டோஒன்று
இன்னொன்று டே இனி.

42 எண்ணங்கள் மூண்டுஎழ எண்ணுபவன் யாரே
உண்மைஅது எப்போதும் உண்டு.

43 ஐயங்கள் பயம்கவலை ஆருக்கு? ஏதுண்டு
அய்யன்கண் நேர்கவனம் வைக்க.

44 மனத்தினால் நுண்அணுவை நுட்பமாய் ஓர்வோம்
மனத்தினின் நுட்பம் அறிவு.

45 மனம்என்பது என்னவென்று உள்நுழைந்து நோக்கின்
மனமென்று ஒன்றிலையாம் ஓர்.

46 மனமெனில் எண்ணங்கள்; மாய்த்திடுதல் ஒன்றே
கணந்தோறும் செய்யக் கடன்.

47 உபநிடதம் மெய்யாக்க ஓர்அவதா ரம்ஓர்
தபஸ்வீ மகரிஷி தான்.

48 பண்டிதர்கள் பாமரர்கள் பல்லோர்க்கும் தன்னருள்
தண்ணென ஈந்த தரு.

49 மலையடி வாரம் நிலைஆசி ரம்ஓர்
தலைவணங்க மோனத் தலம்.

50 எண்ணவே முக்தியாம் எம்பெருமான் ஓராரோ
கண்ணுற கோவில்போ கார்.

51 அப்பாவுக்கு பிள்ளை அடக்கம் எனமொழிவார்
அப்பன்ஈசன் நீறு அணிந்து.

52 தமையனார் நாக சாமி நீக்கவுயிர்
சமைத்தீந்தார் ஞானிக்குத் தாய்

53 அருணை வலம்வந்து அட்ஷரமண மாலை
அருமையாய் தொடுத்தளித் தார்.

54 பிட்சை உணவுபெற பக்தருக் காக
அட்சர மாலை அறி.

55 உள்ளது நாற்பது உள்ளத்தில் ஏற்பது
தெள்ளறி வாளர் தலை.

56 உபதேச உந்தியார் ஓதப் பறப்பீர்!
சபதமிது செய்யத் தகும்.

57 ஆன்மவித்தை ஐயே அதிசுலபம் அய்யனவர்
பொன்மொழி ஏற்றுப் பணி.

58 உருவ வழிபாடு ஒன்றிவிடும் மேலாம்
அருவ வழிபாட்டு டன்.

59 ஒளியைக் காண ஒளிஏனோ ஆன்மா
ஒளிர்ந்து தானே விளங்கும்.

60 ஐம்பொறி மாமனம் அவ்வறிவு அத்தனைக்கும்
அம்ம! ஒளிதரும்ஆன் மா.

(தொடரும்)

# அருளின் ஆட்சி

## நொச்சூர் வேங்கடராமன்
## தமிழாக்கம்: கௌதமன்

ஆன்மிக சாதனையில் முழுமையடைய பக்தி, ஞானம், வைராக்யம் அனைத்துமே இன்றியமை யாதன. பார்க்கப் போனால் ஒரு சாதகனுக்குள் இம்மூன்றின் முழு மலர்ச்சியே ஆத்ம சாட்சாத்காரம் எனப்படுகிறது. தன்னுடைய மிக உயரிய நிலையில் பக்தி என்பது ஆத்மாவின் பேரானந்த வெளிப்பாடே. ஞானம் ஆத்மாவின் ஒளிப்பிழம்பு; பக்தி அதனுடைய ஒளிக் கதிர்வீச்சு. வைராக்யம் அதன் இடையறாத் தன்மை. அஞ்ஞான இருள் நீக்கமே அதன் இறுதி விளைவு.

ஒரு ஜீவனில் ஞானம் முகிழ்க்கும்போது, அவன் தனது அந்தராத்மாவையே இறைவன் என அறிகிறான். உடனே அந்த முடிவற்ற ஆத்மாவில் அவன் பேரன்பு நிலை பெறுகிறது. அந்த நிலை எய்தியபின், அவன் இதய மையத்திலிருந்து இடையறாத பேரானந்தம் வெளிப்பாய்ந்து முடிவில்லாது செல்கிறது. அத்தகைய பேரானந்தமே பரபக்தியின் பூரண வெளிப்பாடு. அத்தகைய எல்லையற்ற பரபக்தி வெளிப்படும்வரை, ஒரு சாதகன் ஆத்ம சாதனையில் முழுமையை அடைய இடையறாது முயலவேண்டும். பக்தி யோகமே எல்லோராலும் ஏற்கப்பட்ட மகிழ்வூட்டுவதும், எளிமையானதும் ஆன பாதை. பக்தி மீதூறல் இன்றி எந்த ஆத்மிக சாதனையுமே வெற்றி பெறாது. மகிழ்வும் தராது. பக்தியே ஆத்ம சாட்சாத்காரத்திற்கும் துறவுக்கும் தாய். ஆன்மிக எழுச்சியின் முதல் அலை வழக்கமாக ஒரு

இனிய குறிப்பிட்டுச் சொல்ல முடியாத தெய்வீக இன்பச் சுவையாய் உதிக்கிறது.

ஆழ்மன உணர்வால் உந்தப்பட்ட இந்த இறைதாகம், தனது தோற்றத்தில் ஒடுங்க விழையும் இந்த வினோதமான கவர்ச்சி, அறிவினால் அறிய இயலாத ஒன்றின், இதுவரை உணர்ந்தறியாத சுவையே பக்தி. ஆரம்பத்தில் தோன்றும் இந்தத் தெளிவற்ற இறையுணர்வு, தீவிர ஆன்மிக சாதனை மூலம் நம்மை ஆன்ம சாட்சாத்காரத்திற்கு அழைத்துச் செல்கிறது. ஆத்ம சாட்சாத்காரம் பெற்ற எல்லா ஞானிகளின் அனுபவமும் இதுவே.

பக்திக்கு ஒரு விளக்கம் கொடுக்க முற்படுவது அதனை மாசுபடுத்தும் முயற்சியே ஆகும். பக்தி ஒரு ‘அநிர்வசநீயம்’ - விளக்க இயலாதது என்று நாரதரும் கூறுகிறார். இருந்தபோதிலும்கூட பக்தியின் வெவ்வேறு வெளிப்பாடுகளையும் சிறப்பியல்புகளையும் ஆராய்ந்து, அவை எங்ஙனம் உயர்ந்த பக்தர்களிடம் வெளிப்படுத்தப் படுகின்றன என்பதனையும் பக்தி ஆசான்கள் விளக்க முற்பட்டுள்ளனர். மிகப்பெரிய ஞானிகளிடம்கூட பக்தியின் ஆழமும், அது வெளிப்படும் வகையும், அவரவரது குணாதிசயங்களையும் வளர்ப்பு முறையையும் பொறுத்து அமைவதைக் காண்கிறோம். பார்க்கப் போனால், ஒரு ஞானிக்குக்கூட, பக்தியின் வெளிப்பாடு வெவ்வேறு நிலைகளிலும், வெவ்வேறு சமயங்களிலும் வெவ்வேறு விதமாக இருக்கும். எனவே பக்தி என்பது என்ன என்பதைத் தெளிவாக வரையறுக்க இயலாது. அது ஒரு தெய்வீக அல்லது தெய்வீக அனுபவம் என்று மட்டுமே கூறஇயலும். ஒரு சாதகனிடம் அது கடவுளின்பால் கொண்ட காதலாகவும், ஒரு ஞானியிடம் இறைவன் அவன் மீது கொண்டுள்ள பேரன்பாகவும் வெளிப்படுகிறது.

ஒரு பக்தன் இறைவனால் கவரப்படும்போது அவன் ஒரு காந்தத்தில் தடுக்க இயலாத கவர்ச்சியால்

இழுக்கப்படும் இரும்பினை ஒத்த நிலையில் உள்ளான். ஒரு இரும்புக் குண்டூசி காந்தத்தை நோக்கி விரைவதுபோல் தோன்றுகிறது. காந்தம் அசையாது நிற்பதுபோல் தோன்றுகிறது. எனினும் குண்டூசி நகரப் பயன்படும் ஆற்றல் குண்டூசியிலிருந்து வரவில்லை. காந்தத்தின் சக்தியாலேயே அது நகர்கிறது. காந்தத்தின் கவர்ச்சி விசையே குண்டூசியைத் தவிர்க்க இயலாமல் காந்தத்தை நோக்கி நகர வைக்கிறது. அதுபோன்றே ஆத்மசாதனையைத் தொடங்கும் பக்தன் இறைவனால் ஈர்க்கப்படுகிறான். இறையருள் எனப்படும் இந்த ஈர்ப்பு சக்தியே கடவுளின் அருள் எனப்படுவது. இவ்வருட் சக்தியே பக்தன் மனதில் செயல்பட்டு அவனை இறைவனை வழிபடவும், இறை நாமத்தை ஜெபிக்கவும், தியானிக்கவும் தூண்டுகிறது. அயலிலிருந்து பார்ப்பவர்க்கு, பக்தன் மிக வருந்திச் சாதனை செயல்படுவதுபோல் தோன்றும். உண்மையில், பக்தன் செயல்படுவதே இல்லை. இறைவன் அருள் வெள்ளத்தால் செலுத்தப்படும் ஒரு துரும்பு போன்றவனே அவன். ஸ்ரீமத் பாகவதத்தில் 'எப்படி உன் மனம் இறைவனால் ஈர்க்கப்பட்டது?' என்ற கேள்விக்கு பிரஹலாதன் விடையிறுக்கிறான்.

"அந்தணனே! கேட்பாயாக! எப்படி ஒரு இரும்புத்துண்டு தன் இச்சை ஏதுமின்றி, ஒரு காந்தத்தால் கவரப்படுகிறதோ, அதேபோன்று என் மனம் தன் முயற்சி ஏதுமின்றியே சக்கரத்தைக் கையில் ஏந்திய பெருமாளிடம் செல்கிறது.

சைவ நாயன்மார்களுள் ஒருவரான திருமூலர் கூறுகிறார்.

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே

- திருமந்திரம் 270

ஆத்மா அன்புமயமானது; அன்பே உருவானது. எனவேதான் ப்ருஹதாரண்ய உபநிடதம் ஒருவனுக்கு மிகப் பிரியமானது ஆத்மாவே என்று கூறுகிறது. ஒரு சாதகன் ஆத்மாவை அறியும் நிலையைத் தன்னுடைய தீவிர சாதகத்தால் அடையும்போது அவன் முழுப் பரிணாமம் அடைகிறான். அப்போது இதுவரை மனதாலும் பிராணனாலும் மறைக்கப்பட்டு இருந்த ஆத்மா வெளிப்பட்டு, தன்னுடைய கவர்ந்து இழுக்கும் ஆற்றலை, மனதை ஆத்மாவை நோக்கி இழுக்கும் வண்ணம் செலுத்துகிறது. இங்ஙனம் மனம் தனது உள்முக நாட்டத்தின் மூலம் மூலத்தில் ஒடுங்கும்போது இறைவன் அல்லது ஆத்மா, தனது முழுப் பிரகாசத்தையும் மனதிற்கு வெளிப்படுத்துகிறது. இறுதியில் அது மனதினைத் தன்னுள்ளே இழுத்து மறையச் செய்கிறது. இதுவே தெய்வீக அனுபவம் ஆகும்.

ஆத்மாவின் ஆற்றல் இயல்பினை சாதகனின் தனித்தன்மை மூலம் வெளிப்படுத்தும்போது அது இறைவன்மீது கொள்ளும் பெரும் காதலாக முகிழ்கிறது. அவன் பூர்ண ஞானம் அடையும்வரை, சாதகன் தன் முயற்சி ஏதுமின்றி, ஒரு பெருவெள்ளத்தால் செலுத்தப்படும் புல்போன்று இறை அருளால் செலுத்தப்படுகிறான். தன்னை இங்ஙனம் செலுத்தும் அந்த கிருபா சக்தியை அவன் உணர்கின்ற நொடியிலேயே அவனுள் ஆத்மாநுபவமாம் பேரின்பம் உதிக்கிறது. இதுபே மனித மனமும் இறை ஒளியும் சந்திக்கும் ஆசீர்வதிக்கப்பட்ட தருணம். இக்கணத்தில் மனித மனம் இறை ஒளியில் கரைந்து ஒன்றாகிறது. இதுகாறும் 'நான்' என்று எண்ணிவந்த அந்த சாதகனின் தனித்துவம் பேரொளியில் ஒடுங்கி ஒன்றாகிறது. இனிமேல் அலைபாயும் மனம் என்று ஒன்று இல்லவே இல்லை. இறைவனின் பேரொளி சாதகனின் இதயத்தில் நிரந்தரமாக ஒளிரத் துவங்குகிறது.

## அருள்

ஒரு முடிவற்ற ஒன்றிலிருந்து நான்
பூர்ணத்துவத்தையும் முழுமையையும் நாடினேன்
பரம்பொருளைப் பற்றிய ஒரு தெளிவற்ற நினைவின்
மீள்கவனம் என்னை வெறியனாக்கித் தேடவைத்தது.
எங்கே நான் அதைக் கண்டேன்?
எங்கே நான் அதை உணர்ந்தேன்?
அறியாத ஒன்றனுக்காய் ஏன் இந்தத் தீவிரத் தேடல்?
இழந்துபோன இல்லத்திற்காய்
ஏன் இந்த மீளாத் துயரம்?
இவ்வுலகம் முழுதுமே
எனக்கு அந்நியமானது
அத்தருணம் என் குருநாதனின்
பேரருள் சுரந்தது
'நீயே சத்யம்' என்ற அவன் கர்ஜனை கேட்டது
எனது இருப்பின் சாரமாக
இந்த சத்யம் எனக்கு தெய்வீக வெளிப்பாடானது
வாழ்வின் மிகப் புராதனமான இந்த
வலிநீக்கும் மருந்து
உலகின் அனைத்துத் துயரங்கட்கும்
பிறவி எடுத்தல் என்ற மிகப் பெரிய நோய்க்கும்
ஒரே சர்வ ரோக நிவாரணி இது;
என்னுடைய ஆன்மாவின் ஆழத்திலே
இவ்வுண்மை உணர்த்தப்பட்டது.

## கிரிவலம் வரும் பௌர்ணமி நாட்கள் – 2013

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அக்டோபர் | 18 | வெள்ளி | காலை 5.35 | 19 | சனி | காலை 5.09 |
| நவம்பர் | 16 | சனி | இரவு 8.30 | 17 | ஞாயிறு | இரவு 8.58 |
| டிசம்பர் | 16 | திங்கள் | பகல் 1.20 | 17 | செவ்வாய் | பகல் 2.59 |

# ஞான விளக்கம்

**வி.நிரஞ்சன்**

பகவானின் சன்னிதியில் நிகழும் ஒவ்வொரு நிகழ்வுமே ஒரு ஞான விளக்கமாகத் துளங்கு கின்றது. ரமண ஆசிரமத்தில் மட்டுமே தியான கூடத்திலும் மகாலிங்கேசுவரர் சன்னிதியிலும் அன்பர்கள் கால்களை நீட்டிவைத்துக் கொண்டு தியானத்திலோ விசாரத்திலோ ஆழ்ந்து இருப்பதைக் காணக்கூடும். எத்துணையோ பல ஆசிரமங்கள் ஆன்மிக அமைப்புக்களின் தியான கூடங்களில் இத்தகைய நியதித் தளர்ச்சி இருப்பதில்லை. அங்கே கால்களை நீட்டி அமர்ந்திருப்பது சன்னிதியை அவமதிப்பது ஆகும் என்று அறிவுறுத்தப் படுகின்றோம். சிற்சில சமயம் அங்கே நியதி காப்பவரின் கோபத்திற்கும் ஆளாகிறோம். பொதுவாகவே நாம் இளவயதிலிருந்தே பெரியவர்களின் முன்னால் கால்களை நீட்டி உட்கார்வது மரியாதை இல்லை என்றே அறிவுறுத்தப் பட்டிருக்கின்றோம். ஆனால் ரமண சன்னிதியில் இப்படி ஒரு நிபந்தனை அற்ற வசதி தியானிப்பவர்களுக்கும் விசாரிகளுக்கும் அன்பர்களுக்கும் இருந்து வருகின்றது. இதற்கும் பகவானின் சன்னிதியில் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியே முக்கிய காரணமாகத் திகழ்கின்றது என்று அறிகின்றோம். அன்றாட நிகழ்ச்சிகளில் ஒன்று ரமண சன்னிதியில் வித்தாகிப் பின் பெருமரமாய் நிலைத்து விட்டு இருக்கின்றது.

மேலை நாட்டினர், கணவன் மனைவி இருவர், பகவானின் சன்னிதியில் அமர்ந்து இருக்கின்றனர். காலை மடக்கிச் சம்மணம் இட்டு உட்காரும் வழக்கம் இல்லாது பழகியவர்கள். ஆதலால் கால்களை முன்னே வைத்தவாறு

அமர்ந்து இருந்தனர். இதைக் கண்ணுற்ற பக்தர் ஒருவர் அவர்களிடம் சென்று பகவானின் முன் அவ்வாறு உட்காருவது மரியதைக்குறைவு என்று கூறி காலை மடக்கி வைத்து உட்காருமாறு சொல்கின்றார். தெரியாமல் செய்துவிட்ட தவறுக்கு மனம் வருந்தியவாறு அவர்களும் கால்களை மடக்கி உட்காருகின்றனர். ஆனால் அவர்களால் சிறிது நேரத்திற்கு மேல் அவ்வாறு உட்கார முடியவில்லை. வேதனைக்கு உள்ளான அவர்கள் ரமண சன்னிதியை விட்டு நீங்க விருப்பம் இல்லாமல் ஆனால் வேறு வழி இல்லாமல் வெளியேறுகின்றனர்.

மௌனமே உருவாய் வீற்றிருக்கும் பகவான் இதை எல்லாம் கண்ணுறுகின்றார். பின்னர் அவ்வன்பரை நோக்கி, நெடுந்தொலைவு பயணம் செய்து அவர்கள் வந்திருக்கின்றார்கள். அவர்களுக்கு நம்போல் உட்கார்வது பழக்கம் இல்லை. அவ்வாறு வற்புறுத்துவது அவர்களுக்கு அசௌகரியத்தையே தரும். மரியாதை அவமரியாதை என்று எல்லாம் நீங்கள் ஏன் உங்கள் மனதைச் சலிக்கவிட்டுக் கொள்கின்றீர்கள்? எப்படி உட்கார்ந்தால் ஏற்புடையது என்று உங்களுக்கு எப்படித் தெரியும்? சரி இங்கே கால்களை நீட்டி உட்காருவது சரியில்லை என்றால் அது அவர்களுக்கும் மட்டுமா? இல்லை, இங்கு இருக்கும் எல்லோருக்கும் பொருந்தும் விதி தானே. அப்படியாயின் நான் மட்டும் கால்களை நீட்டி உட்காருவது சரியாகுமா? நானும் கால்களை மடக்கிக் கொள்ளவேண்டும் அல்லவா? என்று பொருள்பட உரைத்துத் தனது கால்களையும் மடக்கிக்கொண்டு உட்கார்ந்து விட்டார். பகவானது கால்களோ முடக்குவாதத்தினால் பாதிப்பு அடைந்து சதா உபத்திரவம் கொடுத்துக் கொண்டே இருந்தன. தினமும் கால்களுக்கு எண்ணெய் தடவி தேய்த்துவிட்டுக் கொண்ட பிறகு தான் பகவானால் கைத்தடியை ஊன்றிக்கொண்டு நடக்க முடியும். அக்காலத்தில் எடுக்கப்பட்ட காட்சிகளைக் காணும் பொழுதுதான் பகவானது கால்கள்

எவ்வளவு செயலிழந்து இருந்தன என்று உணரமுடியும். பகவானுக்கு இப்படி ஒரு நெருக்கடியைக் கொடுத்து விட்டமைக்கு அடியவர் வருந்தினர். இருந்தும் பகவான் கால்களை மடக்கியவாறே இருந்துவிட்டனர்.

இது குறித்து ஒரு சமயம் பகவான் கயிலாயத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியைச் சுவைபட விரிதுரைத்தனர். கயிலையில் சிவனும் பார்வதியும் வீற்றிருக்க அவர்கள் எதிரில் ஔவையார் சிவனை நோக்கிப் பார்த்தவாறு கால்களைநீட்டி வைத்து அமர்ந்திருந்தார். பார்வதிக்கு இது ஒரு நெறியான செயலாகத் தெரியவில்லை. ஔவையை நோக்கி, புலமை சான்ற நீங்கள் பிறருக்கு எடுத்துகாட்டாக நடந்துகொள்வதற்குப் பதிலாக இவ்வாறு கால்களை இறைவனின் முன் நீட்டியவாறு அமர்ந்திருப்பது ஏற்புடையது ஆமோ? என வினவினார். ஔவையும், தாயே முதிர்ந்த வயது, தள்ளாமை, கண்களும் சரியாகத் தெரியவில்லை. இறைவன் இருக்கும் திசையை நோக்கி என் கால்கள் கிடக்கின்றனவா? தவறுக்கு வருந்துகிறேன். எனது கால்களை சிவன் என் முன் இல்லாத வேறு திசையில் வைத்துக் கொள்கிறேன், என்று கூறியவாறு தனது கால்களை எதிர்த் திசையில் திருப்பி வைத்துக் கொள்கின்றார். உடனேயே சிவன் அத்திசையில் ஔவைக்கு எதிராகத் தோன்றினார். ஔவையும் இதை அறிந்து வேறு ஒரு திசையில் தனது கால்களை வைத்துக் கொள்ள அங்கேயும் சிவன் தோன்ற வேண்டியதாயிற்று. இப்படியே ஔவை இடம் மாற்றி இடம் மாற்றி கால்களை வைக்க வைக்க சிவனும் இடம் பெயர்ந்து கொண்டு ஔவையின் முன் தோன்ற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிட்டது. சிவன் படும் பாடு கண்ட பார்வதி அன்பால் சிவனைக் கட்டிப்போட்டுத் தனதாக்கிக் கொண்ட ஔவையிடம் தனது கடுஞ்சொல்லை மன்னிக்கும்படி வேண்டுகிறார். இறைவன் எங்குதான் இல்லை என்பதையும், உடல் வழி

*நியதி கட்டுப்பாடுகளைவிட உள்ளத்தின் தூய்மையினால் மெய்ப்பொருளைத் தொட்டுவிடுகின்ற பக்தி அதி சிறந்தது என்பதையும் மறைபொருளாய்க் கொண்டது இந்நிகழ்ச்சி. பார்வதி போன்றோராலேயே ஔவையின் அகத்தூய்மையை அறியமுடியாதிருக்க மேலோருடைய நடத்தையை நம்போல்வர் எவ்வாறு அறுதியாய்க் கணிக்கமுடியும்.*

*நம்மை நியாயப் படுத்திக்கொண்டு பிறரைக் குறை கூறும் பழக்கம் நம்மில் இருக்கின்றது. அகந்தையை மையமாக வைத்துக் கொண்டு இருக்கின்ற வரையில் இவ்வியல்பு நீக்குதற்கு அரியது. அகந்தையை ஒட்டி இருப்பது, அகந்தையின் அழிவோடு அதுவும் அழிபடும். இவ்வியல்பினால் அடியவர் பலர் பகவானிடம் சென்று பிறரைக் குறைத்தும் பழித்தும் பேசுவது உண்டு. அச்சமயத்தில் எல்லாம் பகவான் மௌனமே உருவாய் வீற்றிருப்பார். குறை பேசுபவர்களும் பகை வளர்ப்பவர்களும் அம்மௌனத்தால் மனத்தூய்மை அடைந்து அடங்கிவிடுவது உண்டு. சகன்லால் யோகியும் அவருடன் தீவிரமாய்க் கருத்து வேறுபட்டு இருந்த ஒருவரும் பகவானது சன்னிதியில் பெரும் மனமாற்றம் அடைந்தது முந்திய கட்டுரை ஒன்றில் விளக்கப்பட்டு இருக்கின்றது. இவர்களிடம் எல்லாம் பகவான் பொதுவாகக் கூறுவது ஓர் அரிய உபதேசம் ஆகும்: “நான் யாரையும் திருத்துவதற்கு இங்கு வரவில்லை, என்னைத் திருத்திக் கொள்ளத்தான் வந்திருக்கின்றேன். யாரையாவது திருத்தவேண்டும் என்று நான் முயன்றால் ஒரு காக்காய் கூட இங்கே இருக்காது.” கனகம்மாள் இந்நிகழ்ச்சியை விவரித்து இருக்கின்றார்.*

*உள்ள பொருளாகிய அறிவொளியில் தோன்றி மறைகின்றது உடல். தூலமாயினும், சூக்குமமாயினும், அதி சூக்குமக் காரண உடலாயினும் உடல் என்னும் சொல்லில் பஞ்ச கோசங்கள் ஐந்தும் அடங்கிவிடும்*

என்பர் பகவான். உடல் அன்றி உண்டோ உலகம் என்றும் உடல் விட்டு உலகத்தைக் கண்டார் உளரோ என்றும் ஒரு எளிமையான கேள்வியைக் கேட்டுக் காண்பானையும் காணப்படும் அனைத்து விசித்திரங்களையும் ஒரு சேரச் சேர்த்து ஆதி மூலமாகிய அறிவொளியில் அடக்கி விடுகின்றனர் பகவான்:

சித்திரம் ஆம் இஃது எல்லாம் செம்மலையே நின்பாலே
உத்திதமாய் நின்றே ஒடுங்கிடும் ஆல்

என்கின்றனர் பகவான். செம்மலையும் அண்ணாமலையும் ஒன்றே. அதுவே படைப்பினில் அகண்ட ஆன்மப் பொருளாகவும் படைப்பையும் கடந்து பரிபூரண பரம்பொருளாகிய சச்சிதானந்தச் சூனியப் பெருவெளி ஆகவும் விளங்குகின்றது. படைப்பு அனைத்தும் அகண்ட ஆன்மப் பொருளாகிய திரையின் மேல் தோன்றி நின்று ஒடுங்குகின்ற விசித்திரங்கள்.

... நாம உருச்
சித்திரமும் பார்ப்பானும் சேர் படமும் ஆர் ஒளியும்
அத்தனையும் தான் ஆம் அவன்

என்பது உள்ளது நாற்பது வாக்கு.

உடலுக்கு நித்தியத்துவமோ, பூரணத்துவமோ, முற்றறிவோ கற்பிப்பதையும், அவற்றை அடைவதற்கு முயலுவதையும் சில வகுப்பினர் வலியுறுத்தி வருவது பகவானுக்குத் தெரிந்ததே. தன்னை உடல் என்று பாவிப்பதே மூல அறியாமை, அத் தன்மறதியே உடலோடும் உலகோடும் பிணைத்துக் கொண்டு கிளம்பும் பிறவி என்பதைத் தன்னை உடல் அற்று உரு அற்று தானாய் இருப்பதினாலேயே அறிந்துகொண்ட சூனிய ஞானியர் பகவான். தன்னை அறிந்திடில் பின் என்னை உளது அறிய? என்று மீண்டும் ஒரு எளிய கேள்வியைக் கேட்டு ஆன்ம விசாரத்தில் ஆழ்த்திப் பேர் அமைதிச் சமாதியில் ஆழ்த்திவிடுவது பகவானது அருள் வல்லபம்.

இதனாலேயே பகவான் என்றும் தனது உடலுக்குச் சிறப்பு ஏதும் ஏற்றியது இல்லை. ஏன் உடலோடு கூடித் தோன்றும் தனக்கும் பிறருக்கும் கூட வேற்றுமை இருக்கிறது என்று ஒப்புவது இல்லை. ரங்கா, இப்பொழுது உன்னிலிருந்து நான் பெரிதும் வேறுபட்டு இருக்கின்றேன் என்று நினைக்கின்றனை. நீயும் ஒரு காலத்தில் அறியாமையில் இருந்து விடுபட்டு உனது நித்திய இயல்பாகிய ஞான விளக்காகும் பொழுது உண்மையில் நீயும் நானும் வேறுபாடுகள் ஏதும் அற்ற ஒரு பொருளே என்பது தெளிவாகும், என்று விளாச்சேரி ரங்கனிடம் பகவான் ஒரு சமயம் மெய்யின் சாமானியத்தை விளக்கி இருக்கின்றனர்.

தனது பாதங்களை வணங்கி வழிபட முயலுபவர்களிடம் பகவான் எளிமையிலும் எளிமையாய் ஆன்ம வழிபாட்டின் உட்பொருளை இவ்வாறு விளக்குகின்றனர்: "குருவின் பாதங்கள் என்பவை இவைதானா? ஊன் உருவாகிய இவை ஒரு காலத்தில் அழிந்துவிடும். மாறாக உங்களது இதயத் தாமரையில் நான் நான் என்று சதா ஒளிர்ந்து கொண்டு இருக்கும் அகண்ட உணர்வு அன்றோ குருபாதம். அது அன்றோ அனாதி அனந்த சத்தும் அகண்ட சித் ஆனந்தமும் ஆகிய சொருப ஞானமாய் உங்களை உங்களுக்கே அறிவிக்கும் நுழைவாயில் என்னும் அற்புதம். அதுவே முக்தி தர வல்ல குருவின் பேர் அருள்."

அதனால் தான் அன்றோ குரு பாதமாகிய ஸ்புரணத்தையும் மெய்ப்பொருளையும் ஐக்கியப் படுத்தி பகவான்

.... நித்தியமும்

நான் என்று இதயம் நடித்திடுவை ஆல் உன் பேர்
தான் இதயம் என்றிடுவர் தாம்

என்று ஐயம் திரிபு அறத் தெளிவாக்குகின்றனர்.

*அத்தகைய சிறப்புடைய அகம் ஸ்புரண உணர்வாகிய குருபாதத்தில் உடல் நான் என்கின்ற மூல எண்ணமாகிய அகந்தையை ஒடுக்குதல் அன்றோ நமஸ்காரம், குருபாத வணக்கம் ஆகும். அகந்தை எழுச்சி உற்றுச் சலிக்கும் இடம் ஒருவனது தலை என்பதால் அத்தலையை குருபாதமாகிய ஸ்புரணத்தில் அடக்கிவிடுவதே குருபாத வணக்கம், என்று பகவான் நமஸ்காரம் என்னும் ஒரு சொல்லை விளக்கும் முகமாக முதலும் முடிவும் ஆகிய ஆன்ம விசாரத்தின் உட்பொருளையே அடக்கி விளக்கி விடுகின்றனர்.*

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

# கிரிவலம் - ஒரு புதிர்

*லௌகீக குறிக்கோள்களுடன் அதாவது பொன் வேண்டி, பொருள் வேண்டி மற்றும் வேறுபல கோரிக்கைகளுடன் பக்தர்கள் மலைவலம் வருகிறார்கள்.*

*உயர்ந்த குறிக்கோளான ஞானம் வேண்டி அண்ணாமலை வலம் வருவோரும் உண்டு.*

*ஞானமடைந்த ஞானத் தபோதனர்களான பகவான் ஸ்ரீ ரமணர் போன்றோரும் மலைவலம் செய்துள்ளனர்.*

*இந்த ஞானத்தை அருளும் அருணாசலேஸ்வரனும் ஆண்டிற்கு இருமுறை கிரிவலம் வருகின்றார்.*

*இவையெல்லாம் காணும்போது அண்ணாமலை கிரிவலம் என்பது என்ன? எதற்காக?*

*ஆறுமுகமான பொருள் நீயருள வேண்டும்*
*ஆதியருணாசலம் அமர்ந்த பெருமாளே!*

# காலம் கடந்த காட்சி (ஒரு கற்பனை)

**சு. பரமேஸ்வரன்**

*முன்னுரை: (நாயன்மார்களில், காலத்தால் முற்பட்டவர், முதலில் அந்தாதி பாடி தனிச் சிறப்பைப் பெற்றவர் காரைக்கால் அம்மையார். நாயன்மார்களுள் அவர் ஒருவரே அமர்ந்த கோலத்தில் வழிபடப் பெறுபவர். இறைவனால் மூன்றுமுறை "அம்மையே" என்று அழைக்கப்பட்டவர். அம்மையாரும் இறைவனை "அப்பா" என அழைக்கிறார். அப்பா என அழைத்தது அருளனுபவமேயாகும். இறைவன் மாங்கனி கொடுத்துத் தடுத்தாண்டு கொண்டார். மாங்கனி - அது ஞானப்பழம். முன்பு விநாயகப் பெருமான் பெற்றதும் இதுவே. கயிலை மலைக்கு இணையானது திருவருணை. இது பதி முதுநிலை.*

*உருவமும் உயிருமாகி ஓதிய உலகுக் கெல்லாம்*
*பெருவினைப்பிறப்பு வீடாய் நின்ற எம் பெருமான்மிக்க*
*அருவி பொன் சொரியும் அண்ணாமலையுளாய் அண்டர்கோவே*
*மருவிநின் பாதமல்லால் மற்றொரு மாடிலேனே.*

*தமிழகத்தில் தோன்றிய சிறந்த ஞானிகளான ஸ்ரீரமணர், ஔவை, காரைக்கால் அம்மையார் ஆகியோர் சந்திக்கும் சிறப்பைக் கற்பனை செய்து பார்த்து மகிழ்வோமே! காலமும், இடமும் கடந்த நிலையில் உள்ள இவர்கள் செயலும், கருத்தும் ஒன்றுபோல் இருக்கும் என்பதில் ஐயம் உண்டோ?!)*

*ஞானத் தபோதனரை வாவென் றழைக்கும் மலை அண்ணாமலை. திருவண்ணாமலை அன்று திருவிழாக் கோலம் பூண்டிருந்தது. எங்கும் எல்லையில்லாத மகிழ்ச்சி. திருக்கார்த்திகை கொடியேற்று விழா நாள். இனிமையான மாலைப்பொழுது. கந்தாச்ரமத்தில் மோன தவத்தில் வீற்றிருக்கிறார் ரமண பகவான். பக்தர்கள் பலரும் அமர்ந்திருக்கிறார்கள். அன்பர் ஒருவர் எழுந்து ரமணரை நோக்கி ஏதோ கேள்வி கேட்கிறார். அவரது பார்வையோ வழக்கம்போல் வெட்டவெளியிலே லயித்துள்ளது.*

*சமாதி நிலையில் ஆழ்ந்துள்ள அவருக்கு ஒரு காட்சி தோன்றுகிறது. மலையினுள்ளே ஒரு பெரிய நகரம் இருப்பது போலவும், அதில் நீண்டு உயர்ந்த மரங்களும், ஓடைகளும் சோலைகளும் காணப்படுகின்றன. தொலைவில் ஒரு நெடிய ஆலமரம், அதனடியில் இருவர் அமர்ந்திருப்பதுபோல் தோன்றுகிறது. ரமணர் அருகில் சென்று பார்க்கிறார். என்ன அதிசயமாக உள்ளதே?! அமர்ந்திருப்பர்கள் காரைக்கால் அம்மையாரும் ஔவையாரும் அல்லவா? அருகில் சென்று முகமன் கூறி வரவேற்கிறார்.*

*ஈசனாலும், முருகப் பெருமானாலும், "அம்மையே" என்று அன்புடன் அழைக்கப்பட்ட இருவரையும் காண மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. தாங்கள் எப்படி இவ்வளவு தூரம் வந்தீர்கள்?*

*ஔவையார்: ஞானியர்களை உருவாக்கும் சந்நிதியல்லவோ இது. ஆனால் ரமணரே உம்மைக் காணவே நாங்கள் இங்கு வந்தோம். நீ செய்யும் அற்புதத்தைக் காணவே வந்தோம்.*

*ரமணர்: அற்புதமா? தாயே, நீங்கள் கூறுவது ஒன்றும் புரியவில்லையே!*

*ஔவை: சாஸ்திர பண்டிதர்களும், அறிவாளிகளும், விஞ்ஞானிகளும் உம்மிடம் வந்தால் வாய்மூடி மௌனமாகி விடுகிறார்களாமே! அது எப்படி?*

*ரமணர்: பாட்டி, நான் ஒன்றும் ஜால வித்தை செய்வதில்லை. நீங்கள் கூறியதைத்தான் கடைப்பிடிக்கிறேன். "ஏகாந்தம் இனிது இனிது" "மோனம் ஞான வரம்பு" என்றீர்களே, அந்த மோனத்தில் எப்போதும் இருக்கிறேன். அவ்வளவுதான். பின்பு அவரவர்களுக்குத் தெரிந்தவைகளை எழுதுகிறார்கள்.*

*ஔவை: அது சரிதான். உலகில் உள்ள எல்லா மொழிகளுக்கும் தாய்மொழி மோனமே! பிறருக்கு அறிவுறுத்த ஞானியின் ஆத்மானுபூதி ஒன்றே போதுமானது. இந்த விஞ்ஞான உலகில் மனிதனின் பெருமையே பெரிதாக உள்ளது. பகுத்தறிவு என்று புலம்புகிறானே. பகுத்தறிவு என்றால் என்ன?*

*ரமணர்: காரைக்கால் அம்மையார் அன்றே பாடினார்.*

*அன்றும் திருவுருவம் காணாதே ஆட்பட்டேன்*
*இன்றும் திருவுருவம் காண்கிலேன் - என்றும் தான்*
*எவ்வுருவோன் நும்பிரான் என்பார்கட் கென்னுரைக்கேன்*
*எவ்வுருவோ நின்னுருவம் ஏது*

*- அற்புதத் திருவந்தாதி, 61*

*தான் வந்த வரவை அறியாத மனிதனுக்கு ஏது பகுத்தறிவு? இறைவன் எங்கும் நிறைந்துள்ளான் என்ற உண்மையைப் பகுத்து உய்த்து உணர்வதே பகுத்தறிவாகும்.*

*காரைக்கால் அம்மையார்: ரமணரே, நீர் எழுதிய அருணாசல அட்சரமணமாலையில்,*

*ஔவைபோல் எனக்குஉன் அருளைத் தந்தெனை*
*ஆளுவது உன்கடன் அருணாசலா*

*- அக்ஷரமணமாலை, 14*

*ஞானமில்லாது உன் ஆசையால் தளர்வற*
*ஞானம் தெரித்தருள் அருணாசலா*

*- அக்ஷரமணமாலை, 40*

*என்று பாடினாயே, அதன் பொருள் யாது?!*

*ரமணர்: அம்மையே, பொருள் ஒன்றும் அறியேன். பாடவேண்டும் என்று நினைத்துப் பாடினால் தானே பொருள் விளங்கும். அம்மையே நீங்களும்,*

*அறிவானுந் தானே; அறிவிப்பான் தானே*
*அறிவாய் அறிகின்றான் தானே - அறிகின்ற*
*மெய்ப்பொருளுந் தானே விரிசுடர் பார் ஆகாயம்*
*அப்பொருளுந் தானே அவன்.*

*- அற்புதத் திருவந்தாதி, 20*

*என்று பாடியுள்ளீர்களே!*

*அம்மையே! தாங்கள் பேய் உருக்கொண்டு தலங்கள்தோறும் சென்றதாகக் கூறுகிறார்களே, அதுபற்றிக் கூறுங்கள்.*

*காரைக்கால் அம்மையார்: ரமணரே, நீங்களா இப்படிக் கேட்பது? பேய் என்பது கற்பனைப் பொருளா? உலகியர் பார்வையில் இருந்து தப்புவது எப்படி? ஒரு பெண் எலும்புகள் புடைக்க, சதை உருக்குழைந்து, கண் பஞ்சடைத்து இருந்தால் அவளை மற்றவர்கள் ஏறெடுத்துப் பார்ப்பார்களா? பட்டினத்தாரும்,*

*வாளால் மகவரிந்து உட்டவல்லேன் அல்லேன்*
*மாதுசொன்ன சூளால்இளமை துறக்க வல்லேன்*

*என்று பாடியுள்ளதை மறந்தாயோ? ரமணா! உன் அருணாசல அக்ஷரமணமாலையில்,*

*... பிடித்தெனைப் பேயனாக்கினைஎன் அருணாசலா*

*என்று நீயும் பாடியுள்ளாய். பேய் பிடித்தவன் தானாக ஆடுவதில்லை. ஞானிகளும் தானாகக் காரியம் செய்வதில்லை. அவர்களை இயக்குவது இறைவன்*

திருவருள்தான். இப்படியெல்லாம் இருந்தால்தான் பேய் பிடித்த பித்தர் போல் பிறர் கண்களுக்குப் புலப்பட முடியும்.

ஔவை: மானுட வாழ்க்கையில் எத்தனை செல்வங்கள் இருப்பினும் ஏதாவது குறை இருக்கத்தானே செய்யும்? வாழ்க்கையில் அனைத்தையும் உடையவர் யார்?

காரைக்கால் அம்மை: "அறிவுடையார் எல்லாம் உடையவர்" என்று வள்ளுவர் கூறவில்லையா?!

ரமணர்: அம்மையே, ஒன்று மட்டும் உறுதி. மக்கள் நம்புகிறார்களோ இல்லையோ? இயற்கை பொய்த்தாலும் பொய்க்கும். ஆனால் ஔவையின் வாக்கு என்றுமே பொய்க்காது.

அறிவுள்ளோரைக் கனவிலும், நனவிலும்
காண்பதுவே இனிது இனிது

என்றாளே. சாதுக்களின் சங்கத்தை இதற்குமேல் யாரால் கூறமுடியும்?

ஔவை: அதுசரி ரமணரே! அடியார்கள் யார்? அடியார் என்ற வாழ்க்கையின் ஆரம்பம் எது தெரியுமா?

ரமணர்: பாட்டி, நீங்களே கூறுங்கள். நீங்கள் கூறினால் அது இனிமையாக இருக்கும்.

ஔவை: இன்றைய நவீன உலகில் அறிவியல் என்பது ஏன்? எதற்கு? எப்படி? - என கேள்விக்கு மேல் கேள்வி கேட்பதும்; என்றும் மாறிக்கொண்டே இருப்பதுதானே விஞ்ஞானம். இதனால் பலருடைய வாழ்க்கையே கேள்விக்குறியாக மாறிவிட்டது அல்லவா?

பிரம்மன், விஷ்ணுவின் அகந்தை ஒழிந்த இடமும் கேள்விகள் யாவும் முடியும் இடமும் திருவண்ணாமலை அல்லவா?

கேள்வியும், பதிலும் எங்கு முடிவடைகிறதோ அங்கு தான் "அடியார்" என்ற புனித வாழ்க்கை தொடங்குகிறது.

*தாழக் கற்றவரே வாழக் கற்றவர். தொண்டர் தம் பெருமையைச் சொல்லவும் பெரிதே!!*

*ரமணர்: மதுரையில் நான் இருந்தபொழுது தினமும் மாலைவேளையில் மீனாட்சி அம்மன் கோயிலுக்குள் சென்று நாயன்மார் சந்நிதியில் நிற்பேன். கண்களில் கண்ணீர் பெருகி ஓடும். உங்களைப்போல் பக்தியில் சிறந்த அடியாராக வேண்டும் என வேண்டி மனம் உருகி நிற்பேன். மேலும் அது சமயம் எல்லோரும் நின்று கொண்டிருக்க, ஒரு பெண்மணி அமர்ந்த நிலையில் இருப்பது கண்டு வியப்படைவேன். அவர் யார் என்றோ, அந்நிலை காரணம் என்ன என்றோ அறியேன்.*

*பத்தராய் பணிவார்கள் எல்லோருக்கும் அடியேன்*
*அப்பாலும் அடிசார்ந்தார் அடியார்க்கு அடியேன்*

*எனக்கூறி, சாதி, சமயம், காலம், இடம் போன்ற வேறுபாடுகளை எல்லாம் கடந்த நிலையில் அடியார்கள் பெருமையைக் கூறும் பெரிய புராணத்திற்கு ஈடு இணை ஏது தாயே!!*

*ஔவை: அது சரிதான். அன்று அறுபத்துமூவர் சிலைகளை வடித்தவன் மகா புத்திசாலி. காலத்தால் மூத்தவரும், முதலில் அற்புதத் திருவந்தாதி பாடியதும், இறைவனால் அம்மையே என்று அழைக்கப்பட்ட பெருமைகளை அறிந்த சிற்பி அம்மையாரை அமர்ந்த கோலத்தில் வடித்தான். இவர்களது திவ்ய சரிதம் உன்னுள் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியதையும் அறிவோம். அவர்களது பாடல்களை, சரிதத்தை அன்பர்களிடம் நீ கூறும்போது உணர்ச்சிவசப்பட்டு கண்ணீர் மல்க, பேச்சற்று இருப்பது யாவும் அறிவோம். இன்றைய நவீன உலகில் சிறந்த பக்தனும் நீ, ஞானியும் நீயே. நீ கனிந்த கனி. அதனால்தான் உன்னைக் காண நாங்களும் இங்கு வந்தோம்.*

*காட்சி மாறுகிறது. ரமணர் கந்தாச்ரமத்தில் இருப்பதையும், எதிரில் ஒரு பக்தர் நின்றுகொண்டு இருப்பதையும் காண்கிறார். ரமணர் அந்த அன்பரை நோக்கி, ஓய்! ஏன் நின்றுகொண்டே இருக்கிறீர்! உட்காரும் என்றார்.*

*பக்தர்: பகவானே! காலம் என்றால் என்ன? என்று கேட்டேன். பகவான் பதிலொன்றும் கூறவில்லை. அதனால்தான் நின்றுகொண்டு இருக்கிறேன்.*

*ரமணர்: சரி உட்காரும். காலம் என்று ஒன்றும் கிடையாது. காலம் என்பது உன்னுள்ளே இருக்கிறது. ஆனால் காலத்தில் நீ இல்லை. காலம் மனதிற்கே தவிர வேறில்லை. ஒன்றைப் பிரியமாக அனுபவிக்கும்போது காலம் குறைவாகவும், துன்பத்தை அனுபவிக்கும்போது காலம் அதிகமாவது போலும் தோன்றும். இருப்பது சத்யம் அல்ல; இருப்பே (Being) சத்யம். பல நூற்றாண்டுகள் எல்லாம் நொடிப்பொழுதில் சென்று மறையும்*

*இவ்வாறு கூறி பகவான் தாம் கண்ட காட்சியை விவரிக்கிறார்.*

*தொலைவில் கோயில் மணியோசை கேட்கிறது.*

| | |
|---|---|
| *உடல் - இடம் (space)* | *கடந்தநிலை =* |
| *மனம் - காலம் (time)* | *இருப்பு = சுத்தவெளி* |

*ஓதுவார் மூர்த்தி மனமுருகிப் பாடும் தேவாரப் பாடல் காற்றினிலே மிதந்து வந்து நம் காதில் தேனாய்ப் பாய்கிறது.*

***ஒன்றியிருந்து நினைமின்கள் உன்தமக்கு ஊனமில்லை***
***கன்றிய காலனைக் காலாற் கடிந்தான் அடியவற்காச்***
***சென்று தொழுமின்கள்...***

# கடவுளின் சர்வ வல்லமையைச் சந்தேகிக்காதீர்கள்!

**(ஸ்வாமி சிவானந்தரின் உபதேசக் கதையிலிருந்து)**

அவ்விடத்தில் ஒரு பெரும் சர்ச்சை நடந்து கொண்டிருந்தது. கடவுள் சர்வ வல்லமை படைத்தவரா இல்லையா என்பதே அவ் வாக்குவாதத்தின் கரு. அப்போது தேஜஸ் ஒளிரும் சாது ஒருவர் அங்கே வந்தார். அவர் கூறினார்: "கடவுளின் சர்வ வல்லமையைச் சற்றும் சந்தேகப்படாதீர்கள். முடியாது என்பதே கிடையாது. இதனை விளக்கும் ஓர் உண்மை நிகழ்ச்சியைக் கூறுகிறேன்" என்று துவங்கினார் அந்த சாது.

திருக்புரி என்ற செல்வ மிகுந்த ஊரில் காபத்வாயா என்னும் இடத்தில் ஒரு எழில் மிக்க பிள்ளையார் கோயில் உள்ளது. வணங்கும் பக்தர்களின் கோரிக்கை அனைத்தையும் நிறைவேற்றி வைக்கும் சக்தி மிகுந்தவர் என்று அந்தப் பிள்ளையார் பிரசித்தி பெற்றவர். அந்தக் கோயிலின் வாசற்படியில் சந்த் சூர்தாஸ் என்ற குருட்டுப் பிச்சைக்காரன் தினமும் பிச்சை எடுத்துக் கொண்டு இருந்தான். மிகுந்த பக்தியும், அமைதியும் நிரம்பிய அப் பிச்சைக்காரன் பக்தர்கள் பிச்சையிடும் ஒரு சில நாணயங்களைக் கொண்டே தனது வாழ்க்கையை நடத்தி வந்தான். ஒரு சமயம் தொடர்ந்து சில நாட்கள் பிச்சை எதுவும் கிடைக்காமல் பட்டினி கிடக்க நேர்ந்தது. எனவே, அவன் பிள்ளையாரிடம் தனக்கு அருளும்படி மனமுருகிப் பிரார்த்தித்தான்.

*அந்த ஊரில் சேட் முராரிலால் என்ற ஒரு பெரும் பணக்காரன் இருந்தான். நேர்மையற்ற வழிகளில் பெரும் செல்வத்தைச் சேர்த்து வைத்திருந்தான். ஆயினும், திருப்தியே அடைந்ததில்லை. அந்தக் கோயிலில் எழுந்தருளியுள்ள பிள்ளையாரின் அற்புத சக்தியைக் கேட்டறிந்த முராரிலால் அந்தப் பக்கம் வரும் போதெல்லாம் பிள்ளையாரை வணங்கித் தன்னிடம் உள்ள பணம் தற்போது இருப்பதைவிட பத்து மடங்கு அதிகரிக்க வேண்டும் என்று வேண்டுவான். அன்றைக்கும் அவசர அவசரமாகக் காரில் இருந்து இறங்கிக் கோயிலுக்குள் செல்லத் துவங்கினான்.*

*அப்போது, இரு பேச்சுக் குரல்கள் கேட்கவே, தூணின் பின் மறைந்து அந்தச் சம்பாஷணையைக் கேட்கத் தொடங்கினான்.*

*முதல் குரல், அந்தக் கோயிலிலேயே வாழ்ந்து வந்த கஜானனதாஸ் என்ற பக்தருடையது. "விநாயகக் கடவுளே! உங்கள் கோயில் வாசற்படியில் பட்டினி கிடக்கும் இந்த ஏழைக் குருடனுக்கு ஏதாவது செய்யுங்கள். பரிதாபமான ஏழ்மையிலுள்ள சாது சூர்தாஸ் இரவும்பகலும் உங்களை வணங்கி வருகிறான் அல்லவா?" அதற்கு விநாயகக் கடவுள் பதிலளிக்கும் குரலும் கேட்டது. "அப்படியே! நாளை மத்தியானம் பன்னிரண்டு மணிக்குள் இந்தப் பிச்சைக்காரனை லட்சாதிபதி ஆக்கி விடுகிறேன். அவனது வறுமை ஒரேடியாக ஒழிந்து விடும்! கஜானனதாஸ் குருட்டுப் பிச்சைக்காரனின் சார்பாகத் தான் செய்த பிரார்த்தனை பலித்த மகிழ்ச்சியில் தன் இருப்பிடத்திற்குத் திரும்பினார்.*

*ஒளிந்து இருந்து கேட்டுக் கொண்டிருந்த முராரிலாலின் மனதில் பேராசை சொந்தமாகத் துவங்கியது. சந்த் சூர்தாஸிற்குக் கிடைக்கப் போகும் ஒரு லட்சம் ரூபாயை எப்படி அபகரிக்கலாம் என்று திட்டமிடத் துவங்கினான்.*

*மறுநாள் அதிகாலையில் கோயிலுக்கு விரைந்து சென்றான் முராரிலால். பிச்சைக்காரனின் வருகையை எதிர்பார்த்துக் காத்திருந்தான். பிச்சைக்காரன் வந்தவுடன் அவனுக்கு வணக்கம் செலுத்தினான். பணக்காரனின் திடீர் வந்தனத்தால் ஆச்சர்யம் அடைந்த பிச்சைக்காரனிடம் முராரிலால் வந்து கேட்டான், "இதோ பார்! நீ மிகவும் பட்டினி கிடக்கிறாய் அல்லவா! நீ நூறு ரூபாய் பெற விரும்புகிறாயா?" என்று கேட்டான். "ஆஹா! எத்தகைய கருணைமழை இது!" என்று அதிசயித்த சூர்தாஸ் ஆர்வத்துடன் தலை அசைத்தான். உடனே அவனிடம் சேட் நூறு ரூபாயைக் கொடுத்தான். "உனக்கு ஒதே ஒரு சிறிய நிபந்தனை. இந்தச் சந்திப்பின் நினைவாக, இன்று பகல் பன்னிரண்டு மணி வரை விழக்கூடிய பணத்தை நான் எடுத்துக் கொள்வேன்" என்றான் சேட்.*

*இதுநாள் வரை பிச்சைக்காரனுக்கு தினம் வரும் வசூல் மிகச் சில காசுகளே. எனவே, சூர்தாஸ் மகிழ்ச்சியுடன் சம்மதித்தான். சேட் கோயிலின் ஒரு தூணில் சாய்ந்து கொண்டு பிச்சைக்காரன் பாத்திரத்தையே நோக்கிக் கொண்டிருந்தான். நேரம் வேகமாக விரைந்தது. பிச்சைக்காரன் பாத்திரத்திலோ மிகச் சிறு காசுகளே விழுந்து இருநதன. பிச்சைக்காரனுக்கோ கவலை ஏதும் இல்லை. ஏனெனில் அவனுக்குத்தான் நூறு ரூபாய் சுளையாகக் கிடைத்து விட்டதே! ஆனால் லாலுக்கோ பொறுமை கடந்து கொண்டிருந்தது. நிஜமாகவே பன்னிரண்டு மணிக்குள் ஒரு லட்ச ரூபாய் கிடைக்குமோ? அல்லது பிள்ளையார் தன்னை ஏமாற்றப் பார்க்கிறாரா?*

*(அடுத்த இதழில் முடியும்)*

# ஸ்ரீ மாத்ருபூதேச்வர-
# ஸ்ரீ ரமணேச்வர மஹாலிங்க
# கும்பாபிஷேகம்

குடமுழுக்கு அல்லது கும்பாபிஷேகம் ஒவ்வொரு கோயிலிலும் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்பட வேண்டிய ஒரு நிகழ்வாகும். இதன்மூலம் கோயில் உள்ளிருக்கும் கடவுள் சிலைகளின் மேல் உள்ள நமது நம்பிக்கை புதுப்பிக்கப் படுகிறது. குடத்தில் புனித ஆறுகளின் நீரை நிரப்பி, மந்திரங்களினால் தெய்வத்தன்மை ஏற்றப்பட்டு சிலைகளும் கோபுரத்தின் உச்சியிலிருக்கும் கலசங்களும் நீராட்டப் படுவதால் இது குடமுழுக்கு என்று அழைக்கப்படுகிறது. கோபுர கலசங்களும் தெய்வத்தன்மை பெறுவதால் ஒருவர் கோயிலுக்குள் செல்லாமலே கோபுர தரிசனம் மூலமே கடவுளின் அருளைப் பெற இயலும் என்பது இறையாளர்களின் நம்பிக்கை.

ஒரு சிறிய கிராமத்தில் வேங்கடவன் என்பவன் வசித்து வந்தான். அவன் மனைவியும் பிள்ளைகள் இருவரும் வறுமையில் துன்பப்பட்டனர். அவரது மனைவியின் சொற்படி பக்கத்து ஊரில் இருக்கும் ஜோதிடரிடம் ஜாதகங்களைக் காட்டி நல்ல நிலை எப்போது வரும் எனக் கேட்கச் சென்றான்.

ஜோதிடர் வேங்கடவனின் ஜாதகத்தைப் பார்த்து விட்டு இப்பொழுது மாலைநேரம். அதனால் பார்க்கக்கூடாது மறுநாள் காலை வா என்று கூறினார். அவன் மயங்கிய நிலையில் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றபோது இடிமின்னலுடன் கூடிய மழை பெய்தது. மழைக்காக அங்கிருந்த பாழடைந்த கோவிலில் ஒதுங்கினான்.

என்னிடம் பணமிருந்தால் இதைச் சீர்படுத்தி கர்ப்பகிரகம், அர்த்த மண்டபம், மஹா மண்டபம் கட்டியும் மடைப்பள்ளி, அலுவலகம் மற்றும் கோவிலுக்குள் சுவாமிகள் அபிஷேகத்திற்குக் கிணறும், வெளியில், பக்தர்களுக்கு நீராழிமண்டபமும் வாகனங்கள் ஏற்படுத்தி அவற்றைப் பராமரிக்க மண்டபங்களும் கட்டலாமே! பக்தர்கள் வந்து தங்கி வழிபட மக்கள் மண்டபமும் கட்டிச் சேவை செய்வேன். ஆறுகால பூஜை நடக்க வேதமறிந்தோரைப் பணி செய்ய நியமிப்பேன்' என்றெல்லாம் மனத்தில் தானாகக் கோவில் கட்டி குடமுழுக்கு செய்வது போன்ற பாவனை செய்து கொண்டிருந்தான்.

அப்பொழுது பளிச்சிட்ட மின்னல் ஒளியில் அவன் தலைக்கு மேலே இடிந்த கற்களின் இடையே நல்லபாம்பு ஒன்று தொங்கியதைப் பார்த்தான். உடனே பயந்து மண்டபத்தை விட்டு வெளியில் ஓடி வந்தான். அதேநேரத்தில் மண்டபமும் இடிந்து விழுந்தது.

மறுநாள் காலையில் ஜாதகங்களோடு ஜோதிடரைக் காணச் சென்றான். ஜோதிடர் ஆச்சரியப்பட்டார். வேங்கடவனின் ஜாதகப்படி நேற்று இரவு இறந்திருக்க வேண்டும். எப்படி உயிரோடு வந்தான், என்று வியந்து பலநூல்களை ஆராய்ந்தார்.

வேங்கடவனிடம் நேற்றிரவு என்ன நடந்தது என்று கேட்டார். அவன் மண்டபத்தின் நிலையையும் தான் மனத்துள் கோவில் கட்டி குடமுழுக்கு விழா நடத்தியதையும் கூறினான்.

கோவில்கட்டி குடமுழுக்கு செய்த புண்ணியம் உயிரைக் காத்ததை ஜோதிடர் உணர்ந்தார். தெய்வாம்சம் நிறைந்த வேங்கடவன் நீண்டநாள் செல்வத்தோடு வாழ்வான் என்று வாழ்த்தி அனுப்பினார்.

பிற்காலத்தில் பலருடைய உதவியால் வேங்கடவன் அப்பாழடைந்த கோவிலைப் புதுப்பித்துக் கட்டி

முடித்தான். ஊரார் புகழ்ந்தனர். செல்வம் சேர்ந்து பெரும் பக்திமானாக வாழ்ந்தான். வளமான வாழ்வில் வாழ்ந்தான்.

குடமுழுக்கு கோடி புண்ணியம். தெய்வ பக்தி திருவருளைச் சேர்க்கும் என்பது இதன் மூலம் அறியப்படுகிறது.

இத்தகு சிறப்புகள் வாய்ந்த கும்பாபிஷேகம், நம் ரமணாச்ரமத்தில் ஆறாவது முறையாக 25-9-2013 அன்று வெகு விமரிசையாகக் கொண்டாடப் பெற்றது. இதற்குமுன் ஐந்து முறை, 1949, 1967, 1979, 1995, 2004ஆம் வருடங்கள், கும்பாபிஷேகங்கள் சிறப்பாக நடைபெற்றன.

இம்முறை கும்பாபிஷேகப் பணிகள் சுமார் மூன்று மாத காலமாக நடைபெற்று வந்தன. கோபுர சீரமைப்பு செய்தும், வர்ணம் பூசும் பணிகளும் திரு. செல்வநாத ஸ்தபதி அவர்களின் மேற்பார்வையில் வேகமாக நடந்தேறின.

பகவான் காலத்தில் 1949-ஆம் ஆண்டு முதல் கும்பாபிஷேகம் பூரி சங்கராசாரியாரின் தலைமையில், திரு. வைத்யநாத ஸ்தபதி அவர்களின் திருப்பணியில் வைதீக கும்பாபிஷேகமாக நடந்தேறியது. 2004-ஆம் ஆண்டு கும்பாபிஷேக திருப்பணிகள் வைத்யநாத ஸ்தபதி அவர்களின் புதல்வர் திரு. இராமசந்திர ஸ்தபதி அவர்களின் மேற்பார்வையில் நடைபெற்றது. தற்பொழுது நடைபெற்ற கும்பாபிஷேகத் திருப் பணிகளைச் செய்த செல்வநாத ஸ்தபதி அவர்கள் திரு. இராமசந்திர ஸ்தபதி அவர்களின் புதல்வர் ஆவார்.

வெள்ளிக்கிழமை 23-ஆம் தேதியன்று காலை 7 மணிக்கு பூஜைகள் தொடங்கின. 10.30 மணி முதல் 11.00 மணிவரை பூர்ணாஹுதி மற்றும் மஹா தீபாராதனை நடைபெற்றது.

*அன்று மாலை 5.00 மணியளவில் முதல் கால யாகசாலை பிரவேசம் தொடங்கி இரவு 8.00 மணிக்கு மஹா தீபாராதனையுடன் அன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன.*

*மதியம் 3 மணி முதல் 5 மணிவரை ஸ்ரீ ரமண கிரந்தாலயத்தில் (நூலகம்), ஓதுவார்கள் திருத்தணி சுவாமிநாதன், சிவகுமார் அவர்கள் தேவார இன்னிசைப் பாடல்களைப் பாடி பக்தி மழையில் அன்பர்களை மூழ்கச் செய்தனர். ஞாயிற்றுக்கிழமை, 24-ஆம் தேதி இரண்டாம் கால யாகசாலை பூஜை காலை 6.30 மணிக்குத் துவங்கி 11 மணியளவில் பூர்ணாஹுதி, மகா தீபாராதனையுடன் நிறைவுற்றது. மதியம் 3-ஆம் கால யாகசாலை பூஜை 5 மணியளவில் துவங்கி, 8 மணிக்கு மகா தீபாராதனை நிகழ்வுற்றது.*

*ஒவ்வொரு பூஜை முடிவிலும், வேத விற்பன்னர்கள் ரிக், யஜுர், சாம, அதர்வணம் ஆகிய நான்கு வேதங்களிலிருந்தும் சில பகுதிகளை பாராயணம் செய்தனர். ஓதுவார்கள் சைவ சமயக் குரவர்களான அப்பர், சுந்தரர், சம்பந்தர் ஆகியோரின் தேவாரப் பாடல்கள் இசைக்கப்பட்டன. அதன்பின் நாகஸ்வர வித்வான்களும், மிருதங்க வித்வான்களும் சில ராகங்களை வாசித்தனர். மதியம் ஸ்ரீ ரமண கிரந்தாலயத்தில் ஸ்ரீமதி பைரவி மற்றும் மாலதி சகோதரிகளின் கர்நாடக இசைக் கச்சேரி பக்தர்களை மகிழ்வித்தது.*

*ஞாயிற்றுக்கிழமை 25-ஆம் தேதி காலை 5.30 மணியளவில் 4-ஆம் கால யாகசாலை பூஜை துவங்கி, 8.00 மணியளவில் மகா தீபாராதனை காண்பிக்கப்பட்டது. 9.45 முதல் 10.00 மணியளிவில் யாத்ரா தானம் துவங்கி, அதன்பின் புனித நீர் நிரம்பிய கலசங்கள் ஒவ்வொரு கோபுர விமானத்திற்கும் எடுத்துச் செல்லப்பட்டன. பின்னர் மகா அபிஷேகம் செய்விக்கப்பட்டது. அதன்பின் மாத்ருபூச்வரர் மற்றும் ரமண மகா லிங்கங்களுக்கு மகா அபிஷேகம் செய்விக்கப்பெற்றது. பின்னர் மஹா*



தீபாராதனையுடன் விழா இனிதே நிறைவுற்றது. பக்தர்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டு ஸ்ரீ மாத்ருபூதேச்வர-ரமண பகவானின் அனுக்கிரகங்களைப் பெற்றனர் என்பதில் சற்றும் ஐயமில்லை.

அன்று காலை 11.00 மணியளவில் நாராயண சேவை மிகப்பெரிய அளவில் நடைபெற்றது. ஒவ்வொரு நாளும் சுமார் 5000 பக்தர்கள் கும்பாபிஷேக விழாவில் கலந்துகொண்டு எல்லாம் வல்ல ஸ்ரீமாத்ருபூதேச்வர-ரமண பகவானது அருளைப் பெற்றனர்.

விழா நடந்த இம்மூன்று நாட்களும் வேத விற்பன்னர்களின் வேத கோஷங்களும், ஓதுவார்களின் தேவார பக்தி இசையும், நாகஸ்வர, மிருதங்க வித்வான்களின் இன்னிசையும் பக்தர்களை ஆனந்தப் பரவசத்தில் ஆழ்த்தின. மேலும் இம்மூன்று நாட்களிலும் ஸ்ரீ ரமணாச்ரமத்தின் பல இடங்களில், கலந்துகொண்ட அனைவருக்கும் அன்னதானம் அளிக்கப்பட்டது சிறப்பு அம்சமாகும்.

அன்றுமுதல் ஸ்ரீ ரமணாச்ரமத்தில் 48 நாட்களுக்கு மண்டலாபிஷேகம் நடைபெற்று வருகிறது.

# திருச்சுழி பூமிநாதேஸ்வரர் ஆலய கும்பாபிஷேகம்

அருணாசலத்தில் ஞானவள்ளலாக விளங்கிய பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகளை இவ்வுலகிற்கு அளித்த திருத்தலம் திருச்சுழி. சகாயவல்லி சமேத பூமிநாதேஸ்வரர் என்னும் திருநாமங்கொண்டு சிவபெருமான் எழுந்தருளியுள்ள இத்தலம், சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரமும் மணிவாசகரின் திருக்கோவையார்ப் பாடலும் பெற்ற சிறப்புடையது. பிரளயவெள்ளம் இத்தலத்தை அழிக்க வந்தபோது சிவபெருமான் பிரளயவெள்ளத்தைச் சுழித்துத் துவாரத்தில் செலுத்திக் காப்பாற்றினார். மற்றொரு பிரளயத்தின்போது சுழியற்பதியைத் தமது திரிசூலமுனையால் உயரத் தூக்கிக் காத்தருளினார்.

இத்திருக்கோயில் மகா கும்பாபிஷேகம், இவ்வாண்டு செப்டம்பர் 1 ஆம் தேதி நடைபெற்றது. ஆயிரம் ஆண்டுகளுக்குமேல் பழமையான இத்திருக்கோயில் ராமநாதபுரம் சமஸ்தானத்திற்குப் பாத்தியப்பட்டது. திருவண்ணாமலை ரமணாச்ரம பக்தர்கள் சார்பில் ரூ.70 லட்சம் செலவில் விமான கோபுரம், மேல்தளம் மற்றும் கோயில் கோபுரங்கள் புதுப்பிக்கப்பட்டன. திருக்கோயில் திருப்பணி அனைத்தும் சிறப்புற ரமணாச்ரமத்தைச் சார்ந்த திரு. ஆஞ்சநேயலு அவர்களால் செய்விக்கப்பட்டன.

இப்பணிகள் முடிந்து கும்பாபிஷேக விழா 4 நாட்கள் நடந்தது. முக்கிய நிகழ்ச்சியாக கும்பாபிஷேகம் நடந்தது. புனித நீர் கோயில் வலமாக எடுத்து வரப்பட்டு கோபுர கலசத்தில் ஊற்றப்பட்டது. பக்தர்கள் மீது புனித நீர் தெளிக்கப்பட்டது.

இக்கோயில் மகா கும்பாபிஷேகம், ஆக., 26 காலை 6.15 மணிக்கு, யாக சாலை பூஜையுடன் துவங்கியது. பகவான் ஜென்ம நட்சத்திரமாகிய புனர்வசு மற்றும்



விழாவில் கார்கி கீனி மற்றும் ஜப்பான் பக்தை சூன்யா

அருணை விஜய நன்னாளாகிய 1-9-2013 அன்று காலை 11.10 மணிக்கு கும்பாபிஷேகம் நடைபெற்றது. விழாவுக்கு ராமநாதபுரம் சமஸ்தானம், தேவஸ்தானம், ராணி ராஜராஜேஸ்வரி நாச்சியார் தலைமை வகித்தார். உள்ளூர் முக்கிய பிரமுகர்களும், பக்தர்களும் பெருந்திரளாகக் கலந்து கொண்டனர். ஸ்ரீரமணாச்ரமம் சார்பாக T.V. சந்திரமௌலி, இத்திருக்கோயில் திருப்பணிக்காக பெரும் நிதிஉதவி அளித்த ஜப்பான் பக்தை சூன்யா மற்றும் கார்கி கீனி, அவரது தாயாரும், பல ரமண பக்தர்களும் கலந்துகொண்டனர். விழா நிறைவுற்றபின் கூடியிருந்த பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. மாலை 6 மணிக்கு திருக்கல்யாணம் நடந்தது. இதையடுத்து சுவாமி, அம்மன் வீதிஉலா வந்தனர். வறட்சியால் பாதிக்கப்பட்ட இப்பகுதி, கும்பாபிஷேக திருவிழாக் காலங்களில் இறைவனின் அருள் மழையென பெருமழை பெய்விக்கப்பட்டு பூமி குளிர்ந்ததோடல்லாது, கோயில் குளமானது அதிசயிக்கத் தக்க வகையில் நிரம்பியது.

இக்கும்பாபிஷேக விழாவினை முன்னிட்டு ஸ்ரீ ரமணாச்ரமம் பகவானது அன்பரான விசுவநாத சுவாமிகள் சமஸ்கிருதத்திலிருந்து மொழிபெயர்த்த 'திரிசூலபுர மாகாத்மியம்' புத்தக மறுபதிப்பை வெளியிட்டு, சுமார் 700 பிரதிகளை திருச்சுழி கோயிலுக்கு உபயமாக அளித்தது.

# செய்திகள்

## அருணை விஜய விழா

கடந்தாண்டுகளைப் போலவே இவ்வாண்டும் பகவான் அருணையடைந்த விழா செப்டம்பர் 1-ஆம் தேதி சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மதுரை ரமண அன்பர்கள் பேருந்து மூலம் மதுரையிலிருந்து புனித யாத்திரையாகப் புறப்பட்டு பகவான் அருணையடைந்த வழியிலேயே பிரயாணம் செய்து திருவண்ணாமலை வந்தடைந்தனர். அன்று காலை சிறப்புப் பாராயணமும் பூஜைகள் நடைபெற்றன. இவ்வாண்டும் அருணாசலேஸ்வரருக்கு சிறப்பு அபிஷேகங்கள் நடைபெற்றன. இவ்விழா ஸ்ரீரமணாச்ரமத்திற்கு பாத்தியப்பட்ட குரோம்பேட்டை ரமணாலயத்திலும் பக்தர்கள் திரளாகக் கலந்துகொள்ள சிறப்பாக நடைபெற்றது.

## முருகனார் ஆராதனை

## ஸ்ரீ ரமணாச்ரமம்



பகவான் ரமணரால் ஆட்கொள்ளப்பட்டு அவரது வழிகாட்டலுடன் ஆன்மிக வாழ்வை செம்மைப்படுத்திக் கொண்ட சீரிய அடியாரான இராமநாதபுரத்தைச் சேர்ந்த

*கவிஞர் முகவைக் கண்ண முருகனார் ஆவணி அமாவாசை அன்று ரமண பதமடைந்தார் என்பது நாம் அறிந்ததே. அவரது ஆராதனை ஒவ்வோராண்டும் ஸ்ரீ ரமணாச்ரமத்தில் அமைந்துள்ள அவரது சமாதியில் சிறப்பாக அனுஷ்டிக்கப்படுகிறது. இவ்வாண்டும் செப்டம்பர் 5-ஆம் தேதியன்று அவரது சமாதியில் சிறப்புப் பூஜைகளும், பாராயணமும் நடைபெற்றன. அன்பர்களுக்கு பிரஸாதம் விநியோகிக்கப்பட்டது.*

## கோவை, சேலம்

*முருகனார் ஆராதனையை முன்னிட்டு கோயம்புத்தூர் பேராசிரியர் நடராஜன் அவர்கள் இல்லத்தில் சுமார் 50 ரமண பக்தர்களுடன் 4-9-2013 அன்று ரமண சந்நிதிமுறை பாராயணம் செய்யப்பட்டது. மறுநாள் முருகனார் ஆராதனை தினத்தன்று சேலம் ரமண திருக்கோயிலில் இப்பாராயணம் தொடர்ந்தது.*

## முருகனார் மந்திரம், இராமநாதபுரம்

*இவ்விழா முருகனார் பிறந்த தலமான இராமநாதபுரத்தில் உள்ள அவரது இல்லமான 'முருகனார் மந்திர'த்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அன்று 200-க்கும் மேற்பட்ட பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப் பட்டதுடன் சிறப்பம்சமாக பள்ளிச் சிறார்களின் அருணாசல அக்ஷரமணமாலை பாராயணம் நடைபெற்றது. இதே நன்னாளில் விவேகானந்தரின் 150-ஆவது ஜெயந்தி விழா சார்பாக விவேகானந்த ரதம் மாலை 5.00 மணிக்கு முருகனார் மந்திரத்திற்கு பெருந்திரளான பக்தகோடிகளுடன் வந்தது சிறப்பம்சமாகும்.*



*அப்பொழுது அங்குக் குழுமியிருந்த பக்தர்களுக்கு சர்க்கரைப் பொங்கல் மற்றும் சுண்டல் விநியோகிக்கப் பட்டன. இவ்வனைத்து ஏற்பாடுகளையும் இம்மையத்தின் ரமண தொண்டரான திரு. சிரஞ்சீவி அவர்கள் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.*

## *ரமண கேந்திரா கல்வி உதவித்தொகை வழங்கு விழா*



*ரமண கேந்திரா டிரஸ்ட், மைலாப்பூர் சார்பில் ஒவ்வோராண்டும் ஏழை, எளிய மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகின்றது.*



*இவ்வாண்டும் ஜூலை 7-ஆம் தேதியன்று 56 பள்ளிக் குழந்தைகளுக்கும் 4 கல்லூரி மாணவர்களுக்கும் படிப்பு ஊக்கத் தொகையாக தலா ரூ. 1000 வீதமும் கல்லூரி சேர்ந்த (போன வருடம் ஊக்கத் தொகை வாங்கியவர்கள் 4 பேருக்கு தலா ரூ. 2000 வழங்கப்பட்டது). திரு.* B.R. *குமார் அவர்கள் மாணவர்களுக்கு ஊக்கத்தொகையை வழங்கினார்கள். மொத்தம் ரூ. 60000 உதவித்தொகையாக வழங்கப்ட்டது. ரமணோதயம் ஆசிரியர் ராம் மோஹன் அவர்கள் விழாவில் உரையாற்றினார். திருமதி. சியாமளா ராமசந்திரன் நன்றியுரை கூறி அக்ஷரமணமாலை பாடியபின், தேசிய கீதத்துடன் விழா இனிதே நிறைவுற்றது.*

## ஸ்ரீ ரமண குடில், ஒசூர்

D*8/34*, TNHB *காலனி, பாகலூர் ரோடு, ஓசூர்*

*செப்டம்பர் 1, 2013 அன்று ஓசூரில் ஸ்ரீ ரமண குடில் என்னும் ரமண மையம் துவக்கப்பட்டது. காலைப்பாட்டு, அக்ஷரமணமாலை பாராயணத்துடன் துவக்கப்பட்டது. இவ்விழாவில் முக்கியப் பிரமுகர்கள் திரு. டி.எஸ். ராம்நாத், செயலாளர், சின்மயா மிஷன், திரு ஆர். வேல்முருகன், அதிபர், மீனாட்சி பவன் ஒட்டல், மற்றும் திரு. செந்தில், மேனகா கார்ட்ஸ், ஓசூர் ஆகியோர் கலந்துகொண்டனர். தொடர்பு: திரு.* T. *அசோக்குமார், 8754040226/8643842772,* email: ramanakudil@gmail.com

## கே.வி. நாராயணன்

*ஏறக்குறைய 40 ஆண்டுகளாகப் பகவான் ரமணரிடம் ஆழ்ந்த பக்தி கொண்டிருந்த பேராசிரியர் க.வே. நாராயணன் சென்ற ஜூலை 11-ஆம் தேதியன்று தமது 76-ஆம் வயதில் திருவண்ணாமலை புனித க்ஷேத்திரத்தில் ஸ்ரீபகவானின் திருவடிகளை அடைந்தார். 1970-களிலிருந்தே சென்னைவாஸிகளாகிய நாராயணனும் அவரது தமக்கையார் சங்கரியும், அவரின் கணவர் வி. ஸுப்ரமண்யனும் (முன்னாள் சென்னை ரமண கேந்த்ர பொருளாளர்) சென்னை கேந்த்ர*



நிகழ்ச்சிகளில் பங்கெடுத்து வந்தனர்.

பேராசிரியர் நாராயணன் 1999-இல் குரோம்பேட்டை M.I.T. யிலிருந்து ஓய்வுபெற்ற பிறகு அடிக்கடி ஸ்ரீரமணாச்ரமம் சென்று வந்தார். 2003-ஆம் ஆண்டிலிருந்து திருவண்ணாமலையிலேயே நிரந்தரமாகத் தங்கி ஆச்ரம நிகழ்ச்சிகளில் பங்கெடுத்து வந்தார். 2006-இல் பல மாதங்கள் ஆச்ரமத்திலேயே தங்கினார். 2006-ஆம் ஆண்டு இறுதியிலிருந்து நோய்வாய்ப்பட்டதால் ஆச்ரமத்தின் வெளியே தங்கி அடிக்கடி வந்து சென்றார்.

மூர்த்தி சிறிது கீர்த்தி பெரிது எனும் கூற்று நாராயணனுக்கு மிகவும் பொருந்தும். அற்புதமான பேராசிரியர், மறக்கவொணாத பிரகிருதி என்று 36 ஆண்டுகளாக அவரிடம் Instrumentation தொழில்நுட்பம் பயின்ற மாணவர்களாலும், சக பேராசிரியர்களாலும், பிறராலும் போற்றப்பெற்றார். நாராயணன் பெயரால் MIT அருகாமையிலுள்ள ஒரு உயர்நிலைப் பள்ளியில் ஒரு பெரும் கூடம் கட்டவும், MITயில் சில உபகார ஊதியங்கள் அளிக்கவும் அவரது அன்பர்கள் ஏற்பாடு செய்துள்ளார்கள்.

தாராள மனப்பான்மையும், எவர்மாட்டும் இதயபூர்வமான பரிவும், கூரிய அறிவும், அப்பழுக்கற்ற நடத்தையும், இருக்குமிடம் தெரியாத வண்ணம் ஆழ்ந்த அடக்கமும், எல்லாவற்றிற்கும் மேலாக ஸ்ரீபகவான்பால் மாறாத பக்தியும் கொண்ட திரு. KVNக்கு ஸ்ரீபகவானின் திவ்யத் திருவடிகளில் என்றென்றும் தங்குமாறு பிரார்த்திக்கிறோம்.

## *டாக்டர் ரங்கபாஷ்யம்*

*சென்னையைச் சேர்ந்த பிரபல இரைப்பை-குடல் அறுவைச் சிகிச்சை நிபுணர் டாக்டர் ரங்கபாஷ்யம் ஜூலை மாதம் 14-ஆம் தேதி ரமண பதமடைந்தார். அவரது வயது 79.*



*சென்னை மருத்துவக் கல்லூரியில் 1974-ஆம் ஆண்டு இரைப்பை-குடல் அறுவைச் சிகிச்சை துறை கௌரவப் பேராசிரியராக நியமிக்கப்பட்டு, உயர்சிறப்புப் பிரிவை ("எம்.சிஎச்.-கேஸ்ட்ரோ என்டிராலஜி') ஏற்படுத்திய பெருமைக்குரியவர் டாக்டர் என்.ரங்கபாஷ்யம்.*

*அரசு ஊதியம் பெறாமல் சென்னை மருத்துவக் கல்லூரியில் கௌரவப் பேராசிரியராகவும், அரசு பொது மருத்துவமனையில் இரைப்பை-குடல்-அறுவைச் சிகிச்சை துறைத் தலைவராகவும் 30 ஆண்டுகளுக்கும் மேலாக சிறப்பாகப் பணியாற்றியவர்.*

*டாக்டர் ரங்கபாஷ்யம் பகவான் மற்றும் காஞ்சி பரமாச்சார்யாளின் பக்தர் என்பது இங்குக் குறிப்பிடத் தக்கது. பகவானது அடியாரான அவரது தந்தை திரு. நடேச முதலியார் அவர்கள் ஆச்ரமத்திற்கு அடிக்கடி வருகை புரிபவர். அவர் முதலில் ரங்கபாஷ்யத்தை அக்ஷராப்யாசம் செய்வதற்காக ஆச்ரமத்திற்கு அழைத்து வந்தார். ரங்கபாஷ்யம் இளைஞனான பின்பு அவரது தந்தையைப் போலவே மருத்துவராகும்படி பகவான் மறைமுகமாக உணர்த்தினார். அதன்படியே அவர் மருத்துவத் துறையைத் தேர்ந்தெடுத்தார்.*

*அவரது திருமணம் நடைபெற்றவுடன் தனது தந்தையின் அறிவுரையின்படி சொந்த வீட்டிற்குச் செல்லுமுன்*

*மணமக்களாக ரமணாச்ரமம் வந்து பகவானது அருள் பெற்றனர்.*

*2004-ல் நடைபெற்ற ரமண ரதயாத்திரையின் போது அவர் ஆலோசகர் குழுவின் அங்கத்தினராகவும் பணியாற்றியவர்.*

*2002-ஆம் ஆண்டு பத்மபூஷண் விருது பெற்றார். மருத்துவத் துறையின் உயரிய விருதான டாக்டர் பி.சி.ராய் விருது உள்பட பல்வேறு விருதுகள், எடின்பரோ ராயல் மருத்துவச் சங்கத்தின் கௌரவம் எனப் பல பெருமைகளைப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.*

*அவரைப் பிரிந்து வாடும் குடும்பத்தினருக்கும், அவரது துணைவியார் திருமதி. சித்ரா ரங்கபாஷ்யம் அவர்களுக்கும் ரமணோதயம் தனது ஆறுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறது.*

## வசந்த் கோத்தாரி

*குஜராத்தைச் சேர்ந்த ரமண பக்தரான வசந்த் கோத்தாரி, 21 ஆகஸ்டு 2013 பௌர்ணமி தினத்தன்று ஸ்ரீபகவான் பதத்தை அடைந்தார். சிறிது காலமாக உடல்நலம் குன்றியிருந்த அவர் தனது இறுதிக்காலம்வரை முழு பிரக்ஞையுடன் இருந்தார். ஹடயோகா ஆசிரியரான இவர் 1970-ஆண்டு அருணாசலத்திற்கு வந்துபின் அருணாசலவாசி யானார். பகவானது பக்தரான ஜகதீஷ் சுவாமிகளுக்கு பல ஆண்டுகள் சேவை புரிந்து வந்தார். ஆச்ரம குஜராத்தி, ஹிந்தி மொழி புத்தகங்கள் வெளிவர பெரும் பங்காற்றினார்.*



*ஆச்ரமத்திற்கும் ஆச்ரம பதிப்பகங்கள் வெளிவரவும் நிறைய அன்பர்களிடமிருந்து நன்கொடைகள் பெற்றுத் தருவதில் பெரும் பங்காற்றியுள்ளார். பகவானைத் தவிர வேறு குரு*

*தேவையில்லை. பகவான் மட்டுமே நமக்குப் போதும் என்று அடிக்கடி கூறுவார். உடல்நலம் குன்றியிருந்த கடைசிக் காலங்களில் பலரும் அவரை மும்பை அல்லது வெளியூர்களில் உள்ள சிறந்த முதியோர் இல்லங்களில் சேரும்படி வற்புறுத்திய போதும், விடாப்பிடியாக அருணாசலத்திலேயே தங்கி வந்தார். 'இந்த உடம்பே ஒரு பிராரப்தம்' என்ற பகவான் வாக்கினை கடைசிக் காலத்தில் தன்னைச் சந்திக்க வருபவர்களிடம் அடிக்கடி நினைவு கூர்வதுண்டு. அவரது விருப்பத்தின்படியே அருணாசலத்திலேயே ரமண பதத்தை அடைந்தார்.*

## *டி.ஆர்.எஸ்.*



*டி.ஆர்.எஸ். என்று ஆச்ரம பக்தர்கள் எல்லோராலும் அன்புடன் அழைக்கப்பெற்ற திரு. டி.ஆர். சீனுவாசன், 30 ஆண்டுகளுக்கும் மேலாக ஆச்ரமத்தில் பணிபுரிந்து ஸ்ரீ பகவானின் அருளுக்குப் பாத்திரமாகும் பேறு பெற்றார். 1928-இல் சென்னையில் சுருக்கெழுத்தாளராக ஒரு தொழிற் சாலையில் பணிபுரிந்தபோது, அவர் நோய்வாய்ப்பட்டார். மருத்துவர்கள் அது பெரும் நோய் என்றும் ஆறு மாதங்களுக்கு மேல் அவர் உயிர் வாழ மாட்டார் என்றும் கூறிவிட்டனர். தன் கதை முடியப்போகிறது என்று கருதி அவர் மன அமைதிக்காக ஸ்ரீ ரமணாச்ரமத்தில் ஒரு வாரம் தங்குவதற்காக திருவருணை போந்தார்.*

*தில்லையம்பலம் சேர்ந்தார் திரும்பி வருவாரோ என்பதற்கேற்ப, திருவருணையில் பகவானுடைய பேரருள் அவரை விழுங்கி அப்புனித க்ஷேத்திரத்திலேயே இருத்தி விட்டது. சென்னை, தொழிற்சாலை எல்லாவற்றையும் மறந்துவிட்டு தட்டச்சை மட்டும் வைத்துக்கொண்டு ஆச்ரமத்திலேயே பணி புரியலானார். தட்டெழுத்து எந்திரம், டி.ஆர்.எஸ். இணைபிரியாத இருமை என்பதற்கேற்ப இப்படம் பிரசுரிக்கப் பட்டுள்ளது. தற்கால தொழில்நுட்ப வசதிகள் இல்லாத அந்நாட்களில் தன்னந்தனியாக எத்தனையோ விதமாக ஆச்ரமத்திற்கு சேவை செய்தார். கடிதங்களுக்கு பதில் தட்டச்சு செய்வது, எத்தனையோ கடிதங்கள் டஜன் கணக்கில் தட்டச்சு செய்வது, ஆச்ரமம் வரும் அன்பர்களுக்கு தங்கும் வசதி செய்து கொடுப்பது, போஜன சாலையில் அவ்வப்பொழுது பரிமாறுவது, போஜன சாலையைப் பார்வையிடுவது, ஆச்ரம தலைவர் அழைக்கும் பொழுதெல்லாம் உடனே ஓடி வருவது என்றெல்லாம் ஆறு மாதமே மருத்துவர்கள் தந்திருந்த டி.ஆர்.எஸ். 30 ஆண்டுகளுக்கும் மேலாகச் செய்தார் என்றால் அது பகவானின் லீலா விநோதமேயன்றி வேறென்ன! கடிதங்கள் வந்த அன்றே, பதில்கள் தபாலில் சேர வேண்டுமென்ற பகவானது அருட் கட்டளையை அவர் மறந்த நாளே கிடையாது. ஆச்ரமம் மீதும், ஆச்ரம நிர்வாகிகள் மீதும் அவர் பூண்ட விசுவாசம் குறையற்றது. எந்த உடல்நிலையிலும் பகவான் சமாதியை ஒரு மணி நேரமாவது வலம் வராமல் இருக்க மாட்டார். குரு வலத்தையே அவர் கிரிவலமாகக் கருதினார்.*

*2010-இல் தடுமாறிக் கீழே விழுந்ததால் ஏற்பட்ட விபத்திற்குப் பிறகு ஓய்வெடுக்க முடிவெடுத்தார். ஆச்ரமத்திற்கு அருகிலேயே அவரது துணைவியார் திருமதி. மாலதியுடன் தங்கி வந்தார். கடந்த இரு மாதங்களாக அவர் உடல்நலம் குன்றி, செப்டம்பர் 26-ஆம் தேதி தமது 78-ஆம் வயதில் ஸ்ரீபகவானின் திருவடிகளை அடைந்தார். அன்னாரைப் பிரிந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு ரமணோதயம் ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கிறது.*

# ஓர் அன்பு வேண்டுகோள்

ரமணோதயம் வாசக அன்பர்களே!

ரமணோதயம் கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக பொருளாதார தளர்வுகளுக்கிடையிலும் தனது சேவையில் எவ்வித சோர்வுமின்றி ரமண அன்பர்களுக்குச் சேவை செய்வதையே இலட்சியமாகக் கொண்டு சிறப்பாகச் செயல்பட்டு வருவது சொல்லித் தெரிவதில்லை. தனது பதிமூன்றாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் இந்த நல்வேளையில் இதன் நிர்வாகம் ரமண அன்பர்கள் முன் வைக்க வேண்டிய அன்பு வேண்டுகோள் ஒன்றுள்ளது. இதுகாறும் இதனைப் பேணி வளர்த்த பெருமையனைத்தும் ரமணோதய வாசகர்களையே சாரும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இனியும் ரமணோதயம் தொடர்ந்து பொருளாதாரத் தளர்வின்றி தனது பணியைத் தொடர வேண்டுமெனில் அதற்கான வைப்பு நிதி மிகவும் வலுவான நிலையில் வைக்கப்பட வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகியுள்ளது. தொடர்ந்து எவ்விதப் பொருளாதாரத் தடங்கலுமில்லாமல் இதன் பணி தொடர குறைந்தபட்சம் ரூபாய் பத்து இலட்சம் வைப்பு நிதி உருவாக்கப் பட வேண்டும். இதற்கு பகவானைப் பிரார்த்திப்பதுடன் உங்களைத்தான் இப்பொருளுதவியை அளிக்க வேண்டும் என வேண்டுகிறோம். இந்த வைப்புத் தொகையின் கணக்கில் பொருளுதவி செய்ய தாங்கள் ஆயிரம் மற்றும் அதன் மடங்குகளாக பணமாகவோ அல்லது காசோலையாகவோ "Ramana Kendra Trust, A/c. Ramanodhayam" என்னும் கணக்கிற்கு செலுத்த வேண்டுகிறோம். இத்தொகை அளிப்போருக்கு S80G பிரிவின் கீழ் வருமான வரி விலக்கு உண்டு.

என்றும் பகவான் பணியில்,
ரமண கேந்திரா டிரஸ்ட்
சென்னை

## பகவான் ரமணரின் சேவை மையங்கள்

| | | |
|---|---|---|
| ***மைலாப்பூர்*** திரு R. வேங்கடகிருஷ்ணன், ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் | ......... | 24611397 |
| ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் மேலாளர் கண்ணன் | ......... | 9940418375 |
| ***குரோம்பேட்டை,*** *ரமணாலயம்* | ......... | 9444261296 |
| ***கிழக்கு தாம்பரம்*** திரு M.A. ராமசாமி | ......... | 9790873138 |
| ***நங்கநல்லூர்*** திரு S. இராமமூர்த்தி | ......... | 22244667 |
| ***மாம்பலம்*** திரு M.K. வைத்தியநாதன் | ......... | 23716495 |
| ***விருகம்பாக்கம்*** திருமதி கௌசல்யா | ......... | 24790635 |
| ***கொளத்தூர்*** கே.ஆர். கோபாலகிருஷ்ணன் | ......... | 9884355454 |
| ***சூளைமேடு*** திரு V. ரமணன் | ......... | 9444172623 |
| ***புதுச்சேரி*** *ரமண கேந்திரம்* | ......... | 0413-2272141 |
| ***மதுரை*** சோமசுந்தரம் | ......... | 04522348157/2346102 |
| ***இராமநாதபுரம்*** சிரஞ்சீவி | ......... | 9360047936 |
| ***திருச்சுழி*** ஹாலாஸ்ய பட்டர் | ......... | 9442004615 |
| ***மலையாண்டிபட்டினம்*** பாலசுப்பிரமணியம் | ......... | 9965622878 |
| ***பொள்ளாச்சி*** ரமண குமார் | ......... | 9487016880 |
| ***ஒட்டன்சத்திரம்*** வடமலைக்கண்ணன் | ......... | 9842912474 |
| ***பழனி*** என். சோமசுந்தரம் | ......... | 9942327770 |
| ***சேலம்*** குப்புசாமி | ......... | 0427-2295460 |
| ***வந்தவாசி*** டாக்டர் ரவி | ......... | 9787180757 |
| ***மடம்*** சுந்தரமூர்த்தி | ......... | 9942264556 |
| ***திண்டுக்கல்*** பழ. முத்தையா | ......... | 9443070924 |
| ***பூண்டி*** மாரியப்பன் | ......... | 9486576687 |
| ஓசூர் அசோக்குமார் | ......... | 8643842772 |

---

Ramanodhayam - Tamil Quarterly, Registered with the Registrar of Newspaper for India. RNI NO.: TNTAM/2001/5542

Printed and Published by: A. Kumar Raja, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004 on behalf of Ramana Kendra Trust, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004

Editor: Dr. S. Ram Mohan

*Printed at:* **Multi Craft,**
9, Appavu Gramani 2nd St.,
Robertsonpet, Mandaveli, Chennai 600 028.



ஶ்ரீமாத்ருபூதேச்வர-ரமணேச்வர
மஹாலிங்க கும்பாபிஷேகம்
25-8-2013



Registered with the Registrar of Newspaper for India RNI No.:TNTAM/2001/5542



# திருச்சுழி ஸ்ரீ சஹாயவல்லி சமேத பூமிநாதேஸ்வரர் ஆலய மஹாகும்பாபிஷேகம்

1-9-2013

